# நியூடெல்லி எரிகிறது

## - ராஜேஷ்குமார்

## 1

நியூ டெல்லி.

கன்னாட் ப்ளேஸ் சர்க்கிளில் பஸ் நின்றதும் இறங்கிக் கொண்டாள் ராகினி ஜெயகர். காலை நேர கன்னாட் ப்ளேஸ் வெகு இரைச்சலாய் இருந்தது. பிளாட்பார கடைகளில் சகலமும் விற்றார்கள்.

ராகினி ஜெயகர் பிளாட்பார நெரிசலைக் கடந்து ஆட்டோ ஸ்டாண்டுக்கு வந்து வரிசையில் காத்திருந்த முதல் ஆட்டோவில் ஏறிக் கொண்டாள். தமிழ் ஆட்டோ. முன்பக்க கண்ணாடியில் ஓம் முருகா ஸ்டிக்கர்.

நெற்றியில் விபூதிக்கீற்றோடு இருந்த டிரைவரைக் கேட்டாள்: "தமிழா?"

"ஆமாம்மா...."

"இத்தனை நாளா... உன்னை இந்த ஸ்டாண்ட்ல நான் பார்க்கவே இல்லையே?"



"ரெண்டு நாளாத்தான் வர்றேன்... ரீகல் சர்க்கிள் ஸ்டாண்ட்ல இருந்தேன். ரோட்டை அகலப்படுத்தப் போறதா சொல்லி ஸ்டாண்டை எடுத்துட்டாங்க. அதுதான் ஆட்டோவை இங்கே கொண்டாந்துட்டேன். எங்கேம்மா போகணும்?"

"நேதாஜி என்ஜினியரிங் காலேஜ்..."

ஆட்டோ புறப்பட்டது.

ராகினி ஜெயகர் சீட்டுக்கு சாய்ந்து கொண்டு டம்பப் பையைப் பிரித்து அந்தச் சிறிய நோட்டுப் புத்தகத்தை எடுத்தாள்.

டிரைவர் கேட்டார்: "அந்தக் காலேஜ்ல வேலை பார்க்கறீங்களாம்மா...?"

"ஆமா... கெமிஸ்ட்ரி புரபசர்...! உனக்கு சொந்த ஊர் எது?"

"மன்னார்குடி."

"மன்னார்குடியில இந்த ஆட்டோவை ஓட்ட முடியாதா? டெல்லிக்கு வந்திருக்கே...?"

"உண்மையைச் சொல்லட்டுங்களாம்மா..."

"சொல்லு..."

"ஊர்ல கடன் தொல்லை..."

ராகினி ஜெயகர் சிரித்துவிட்டு - நோட்டுக்கைப் பிரித்தாள். இன்றைக்கு முதல் வகுப்பு இரண்டாவது வருட பொறியியல் மாணவர்களுக்கு எடுக்க வேண்டும். நினைக்கும்போதே பயமாக இருந்தது.

மாணவர்களா அவர்கள்?

ரௌடிகள்.

வகுப்பு எடுக்கும்போது பாடத்தைக் கவனிக்காமல் உடம்பின் அசைவுகளை மெல்பவர்கள்.

'ஜன்பாத்'தின் அகலமான ரோட்டுக்குள் ஆட்டோ பிரவேசித்து சென்ட்ரல் டெலிகிராப் ஆபீஸையும், ரிசர்வ் பேங்க்கையும் கடந்து ஓடியது.

"அம்மா..." டிரைவர் மறுபடியும் கூப்பிட்டான்.

அவளுக்கு எரிச்சலாய் இருந்தாலும் "ம்" என்றாள்.

"உங்களுக்கு சொந்த ஊர்?"

"மெட்ராஸ்" சொல்லிவிட்டு மேற்கொண்டு பேச விரும்பாதவளாய் கையிலிருந்த - நோட்ஸ் ஆப் லெஸனை புரட்டிப் பார்த்தாள். லெக்சர் செய்ய வேண்டிய குறிப்புகளை மூளைக்குள் ஏற்றிக் கொண்டிருக்கும்போதே - மோதிலால் நேரு மார்க்கத்தின் வளைவில் இருந்த நேதாஜி என்ஜினீயரிங் காலேஜின் கட்டடம் மரங்களுக்கு மத்தியில் தெரிந்தது.

ஆட்டோவின் வேகம் குறைந்தது. ராகினி ஜெயகர் மீட்டரைப் பார்த்தாள். அது ஐம்பது ரூபாயை விழுங்கியிருந்தது.

"காலேஜ்க்குள்ளே போகணுமாம்மா...?"

"வேண்டாம்... கார் தவிர வேற எந்த வாகனமும் உள்ளே போகக்கூடாது."

ஆட்டோ காம்பௌண்ட் கேட் அருகே நின்றது. பணத்தைக் கொடுத்துவிட்டு இறங்கிக்கொண்ட



ராகினி ஜெயகர் புடவைத் தலைப்பை சரிப்படுத்திக் கொண்டு உள்ளே போனாள்.

மாணவர்களும் மாணவிகளும் ஆங்காங்கே திட்டுத் திட்டாய் தெரிந்தார்கள்.

பரிச்சயமான ஒரு மாணவிகள் கும்பலைக் கடந்தபோது அவள் ஆச்சர்யப்பட்டாள்.

அவர்கள் குட்மார்னிங் சொல்லவில்லை. ஒரு அந்நிய பார்வை பார்த்துவிட்டு - அரட்டையைத் தொடர்ந்தார்கள்.

"இவ்வளவுதானா உன் லவ்வரோட தைரியம்...? ஹோட்டல்ல ரூம் எடுத்து ஆறு மணிநேரம் தங்கியிருக்கீங்க... அந்தக் கோழை ஒரு முத்தம் மட்டும்தானா கொடுத்தான்...!"

எல்லோரும் சிரித்தார்கள்.

ராகினி ஜெயகர்க்கு கோபம் உள்ளுக்குள் கனன்றது. 'கொஞ்சம்கூட டீஸன்ஸி இல்லாமல் - ஒரு குட்மார்னிங்கூட சொல்லாமல் - நான் வருவதையும் பொருட்படுத்தாமல் முத்தம் கொடுத்த காதலனைப் பற்றி எனக் காதுபடவே பேசுகிறார்களே...!'

வாசலைக் கடந்தபோது -

அவளுக்கு வெகுவாய் பரிச்சயமான மூன்றாவது வருட பி.இ., மாணவிகள் எதிர்ப்பட்டார்கள். 'மேடம்... மேடம்...' என்று உருகி வழிகிற கும்பல் அது. லீஸர் நேரங்களில் சினிமாவிலிருந்து அரசியல் வரைக்கும் அரட்டை அடிப்பார்கள்.

ராகினி ஜெயகர் அந்த மாணவிகளை புன்னகையோடு பார்க்க - அவர்கள் அவளைக் கண்டுகொள்ளாமல் போனார்கள்.

திடுக்கிட்டாள்.

'என்னாயிற்று இவர்களுக்கு...?'

'காலையில் பார்த்தால் குட்மார்னிங், மத்தியானம் பார்க்க நேர்ந்தால் குட் ஆஃப்டர்நூன், சாயந்தரம் பார்த்தால் குட் ஈவினிங் சொல்லும் இவர்கள் இன்றைக்கு அந்நியமாய் பார்ப்பது ஏன்...?'

ராகினி ஜெயகர்க்கு புரியவில்லை.

குழப்பமாய் நடந்தாள்.

'என் மேல் ஏதாவது கோபமா...?' கல்லூரியின் முகப்பு படிகளில் ஏறி, வராந்தாவுக்குள் நுழைந்து, பிரின்சிபாலின் அறையை நோக்கி நடந்தாள்.

மனசுக்குள் கோபம் மோதியது.

'மாணவிகள் ஏன் இப்படி கண்டுகொள்ளாமல் போகிறார்கள்...?'

'ஒருவேளை... என்னை அவர்கள் பார்க்கவில்லையோ...?'

'பார்த்தார்களே...!'

பிரின்சிபால் அறை வந்தது. தள்ளு கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனவள் - நாற்காலிக்கு சாய்ந்து யாருடனோ டெலிபோனில் பேசிக்கொண்டிருந்த பிரின்சிபால் மிஷ்ராவைப் பார்த்து 'குட்மார்னிங்' சொல்லிவிட்டு, வருகை பதிவேடு வைக்கப்பட்டிருந்த மேஜையை நோக்கிப்



போனாள்.

பதிவேட்டுக்குப் பக்கத்தில் வைத்திருந்த பேனாவை எடுத்து கையெழுத்து போடப் போனவள் - பிரின்சிபால் மிஷ்ராவின் "எக்ஸ்க்யூஸ்மீ" குரலைக் கேட்டு திரும்பினாள்.

மிஷ்ரா ரிசீவரை வைத்துவிட்டு, அவளுக்குப் பக்கத்தில் வந்தார்.

"அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர்ல கையெழுத்துப் போட போறீங்களே...! யார் நீங்க...?"

ராகினி ஜெயகர் திடுக்கிட்டாள்.

'நான் யாரா?'

'இவர் என்ன உளறுகிறார்...?'

மிஷ்ராவை முறைத்தாள் ராகினி ஜெயகர்.

அவர் கேட்டார்: "என்ன... கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமே அப்படி பார்க்கறீங்க? அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர்ல கையெழுத்துப் போட வந்திருக்கிற நீங்க யாருன்னு கேட்டேன்...?"

"சார்... ஆர்... யூ... ஜோக்கிங்...? என்னை உங்களுக்கு நிஜமாவே யார்ன்னு தெரியலையா...?"

"தெரியாமத்தானே கேட்கிறேன்...?"

ராகினி ஜெயகர் அவருடைய முகத்தைப் பார்த்தாள்.

அவர் முகத்தில் வேடிக்கை இல்லை. கண்களில் கடுமை கலந்திருந்தது. நிஜமாய்த்தான் கேட்கிறார்.

"ச... சார்.. ஐயாம் ராகினி ஜெயகர்..."

"ராகினி ஜெயகர்..."

"எஸ்..."

மிஷ்ரா புன்னகைத்தார். அந்தப் புன்னகையில் கோபம் தெரிந்தது. "என்ன விளையாடறியா?"

"சார்..."

"கோ அவுட்..."

"சார்... நான் ராகினி ஜெயகர்..."

"பேசாதே... வெளியே போ..."

அவள் திடுக்கிட்டாள்.

'இவர்க்கு என்ன ஆயிற்று?'

'நான் ராகினி ஜெயகர் என்று சொன்னால் இவர் ஏன் நம்பமாட்டேன் என்கிறார்...?'

அவள் திகைப்பாய் யோசித்துக் கொண்டிருக்கும் போதே கதவு திறந்தது.

பிஸிக்ஸ் புரபசர் தீட்சித் கழுத்து டையை இறுக்கிக் கொண்டு உள்ளே வந்தார். பிரின்சிபாலைப் பார்த்ததும் "குட்மார்னிங்" என்றார்.

ராகினி ஜெயகர் அவர் பக்கம் திரும்பினாள்.

"குட்மார்னிங் மிஸ்டர் தீட்சித்..."

தீட்சித் திகைத்தார்.

"குட்மார்னிங்...! யார் நீங்க...?"

"உங்களுக்குக் கூடவா என்னைத் தெரியலை...? ஐயாம் ராகினி ஜெயகர்..."

தீட்சித் பிரின்சிபாலை பார்க்க – அவர் சிரித்தார்.

"மிஸ்டர் தீட்சித்...! இந்தப் பொண்ணு ராகினி



ஜெயகராம்... அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர்ல கையெழுத்துப் போட வந்துட்டா..."

"யாரம்மா நீ..?"

ராகினி ஜெயகர் வெறிபிடித்த மாதிரி கத்தினாள். "அட! கிழவன்களா! என்னை உங்களுக்குத் தெரியலை? ஐயாம்.. ராகினி ஜெயகர். ஒய்ஃப் ஆப் ஜெயகர். இந்த காலேஜ்ல கெமிஸ்ட்ரி புரபசர்..."

தீட்சித் பிரின்சிபாலை ஏறிட்டார்.

"ஸாரி... ஷி ஈஸ் ஸ்லைட்லி டச்சட்... மென்ட்டல் கேஸ். பியூன்களைக் கூப்பிட்டு வெளியே அனுப்புங்க..."

"என்னடா சொன்னே...? நானா பைத்தியம்? நான் ராகினி ஜெயகர்... ஆர்.. யூ ப்ளேயிங் வித் மீ...?"

ராகினி ஜெயகர் மேஜை மேல் இருந்த வருகைப் பதிவேட்டை எடுத்து – தீட்சித் மேல் ஓங்கி அடிக்க – காகிதங்கள் பறந்தது.

மிஷ்ரா அழைப்பு மணியை அழுத்த – வெளியே இருந்து காக்கி யூனிஃபார்ம்களோடு இரண்டு ப்யூன்கள் ஓடி வந்தார்கள்.

"லால்சந்த்! கன்ஷிராம்...!"

"ஸாப்..."

"இந்தப் பொண்ணைக் கொண்டு போய் வெளியே விட்டுட்டு வாங்க..."

அவர்கள் அவளை நெருங்க – அவள் கத்தினாள். ஆட்காட்டி விரலைக் காட்டி எச்சரித்தாள்.

"எவனாவது எம் பக்கத்துல வந்தீங்க... ரெண்டா வகுந்துருவேன்... நானாடா பைத்தியம்? நான் ராகினி ஜெயகர்... கெமிஸ்ட்ரி புரபசர். டேய்... லால்சந்த்... உன்னோட பொண்டாட்டிக்கு ஏதோ ஆபரேஷன் பண்ணனும்ன்னு சொல்லி போன மாசம் என்கிட்ட ரெண்டாயிரம் ரூபா கடன் கேட்டே... நான் உனக்கு ஆயிரம் ரூபா கொடுத்தேன். ஞாபகமில்லே...?"

லால்சந்த் ஆச்சர்யப்பட்டான்.

'அட... கரெக்டா சொல்றாளே...?'

மிஷ்ரா குரல் கொடுத்தார். "அவ... எதையாவது உளறிகிட்டு இருப்பா... வெளியே இழுத்துட்டுப் போய் விட்டுட்டு வாங்க..."

"டேய்ய்ய்..." வீறிட்ட ராகினி ஜெயகர் சுற்றும் முற்றும் பார்த்து, பிரின்சிபால் மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி டம்ளரை எடுத்து, அதை மேஜை முனையில் மோதி - 'ச்சலீர்' என உடைத்து ஆயுதமாக்கிக் கொண்டு, லால்சந்த்தையும் கன்ஷிராமையும் நோக்கி நீட்டினாள்.

"எவனாவது என்னைத் தொட்டீங்க... உடம்பு முழுதும் ரத்த விளாறு ஆயிடும்..."

மூச்சிரைத்துக் கொண்டு அவள் கத்த, எல்லோரும் பின்வாங்கினார்கள்.



## 2

டெல்லி சாணக்யபுரியின் சுத்தமான ஒரு ரோட்டின் வளைவில் ஹோட்டல் மொகல் இண்டர்நேஷனல் - சிப்ரஸ் மரங்களுக்கு மத்தியில் சம்மணம் போட்டு உட்கார்ந்திருக்க - ஹோட்டலின் முகப்பில் வரிசையாய் கலர் கலராய் கொடிகள் பறந்தன.

ஹோட்டலில் 5வது மாடியில் 545 எண்ணிட்ட அறைக்குள் விவேக்கும் ரூபலாவும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

"நான் வரமாட்டேன்..." இது ரூபலா.

"நீ வந்துதான் ஆகணும்..." இது விவேக்.

"சொன்னா கேளுங்க... வேண்டாம்..."

"ஏன் வேண்டாம்...?"

"எனக்கு பிடிக்கலை..."

"ஏன் பிடிக்கலை...?"

"படத்தோட தலைப்பே ஒரு மாதிரியா இருக்கு..."

"என்ன ஒரு மாதிரியா இருக்கு...? ஹனி லிப்ஸ். தமிழில் சொல்லப்போனா... தேன் உதடுகள். நல்லாத்தானே இருக்கு...?"

"படம் ரொம்ப செக்ஸியா இருக்கும்னு நினைக்கிறேன். படத்துக்குப் போனா சீட்ல நெளிய வேண்டி இருக்கும்..."

"இதோ பார் ரூபி...! நாம டெல்லிக்கு

வந்திருக்கிறது சர்வதேச பட விழாவுக்கு... இந்த விழாவுக்கு வர்ற படங்கள் கொஞ்சம் அப்படியும் இப்படியுமாத்தான் இருக்கும். இந்தப் படவிழாவுக்கு வர்ற படங்கள்ல கண்டிப்பா... அது மாதிரியான காட்சிகள் இருக்கத்தான் செய்யும்... ஹனி லிப்ஸ் ஒரு க்ரைம் படம். ரெண்டு ஆஸ்கார் விருது வாங்கியிருக்கு..."

"படத்துக்கு வர்றேன்... ஒரு கண்டிஷன்..."

"என்ன...?"

"படத்துல அந்த மாதிரியான காட்சிகள் வர ஆரம்பிச்சா உங்க தொடையில ஒரு கிள்ளு கிள்ளுவேன். நீங்க உடனே எழுந்துடணும்..."

"சரி..."

அறையை பூட்டிக்கொண்டு வெளியே வந்தார்கள். டெல்லியின் காலை ஒன்பதரை மணி சூரியன் அடித்த குளிர் காற்றில் சோம்பலாய் இருந்தான்.

ரோட்டுக்கு வந்து டாக்ஸியைப் பிடித்தார்கள்.

"கிதர் ஜானே கா ஸாப்...?"

"சாணக்யா தியேட்டர்..."

"பைட்டியே..."

உட்கார்ந்தார்கள்.

டாக்ஸி புறப்பட்டது.

"இந்த கண்ணராவி படங்களை பார்க்கிறதுக்காக பத்து நாள் லீவு போட்டுகிட்டு டெல்லி வந்திருக்க வேண்டாம்... நேத்து பார்த்த படத்துல எவ்வளவு



நீளமான முத்தக்காட்சி... கதையில வர்ற அந்த மீசைக்காரன் ஹீரோயினோட மூஞ்சியையே சாப்பிட்ட மாதிரி எனக்கு ஃபீலிங்..."

விவேக் சிரித்தான்.

"அந்த மாதிரியான காட்சிகள் வர்றப்ப தியேட்டர்ல எவ்வளவு பெரிய நிசப்தம் பார்த்தியா...?"

"அவனவன் மூச்சைக்கூட விட்டிருக்க மாட்டான்..."

டாக்ஸி பஞ்சசீல மார்க்கத்தில் பாய்ந்தது. அந்த ரோடு நிறைய வாகனங்கள். தனக்கு முன்னால் போய்க்கொண்டிருந்த வாகனங்களை விழுங்கியது. அப்பர் பிரிட்ஜ் சாலைக்கு போனபோது டிராஃபிக் சிக்னலின் சிவப்பில் மாட்டிக் கொண்டு நின்றது.

விவேக் டிரைவரின் தோளைத் தொட்டான்.

"டிரைவர்...!"

"ஸாப்..."

"டாக்ஸியை சாணக்யா தியேட்டர்க்கு விட வேண்டாம்!"

"பின்னே...?"

"மயூரா டவர்ஸ்க்கு போங்கள்..."

ரூபலா விவேக்கை குழப்பமாய் ஏறிட்டாள்.

"எதுக்காக மயூரா டவர்ஸ் போகச் சொல்றீங்க?"

"அங்கே ஒருத்தரைப் பார்க்க வேண்டியிருக்கு..."

"என்ன திடீர்ன்னு...?"

"இப்பத்தான் ஞாபகம் வந்தது..."

"என்னால நம்ப முடியலை..."

"அட... நிஜமாத்தான்..."

"பொய்..."

ரூபலா அழகாய் சிணுங்கி, விவேக்கின் தோள்பட்டையில் இரண்டு கைகளாலும் குத்திக் கொண்டிருக்கும்போதே மயூரா டவர்ஸ் வந்தது.

"ம்... இறங்கு..."

"நானும் இறங்கணுமா?"

"ஆமா..."

டிரைவர் கேட்டான்: "வெயிட்டிங்..."

"ஆமாம்..."

"எவ்வளவு நேரமாகும்?"

"பத்து நிமிசம்..."

விவேக்கும் ரூபலாவும் மயூரா டவர்ஸ்க்குள் நுழைந்தார்கள்.

ஏகப்பட்ட காம்ப்ளக்ஸ்கள்.

க்ரௌண்ட் ஃப்ளோரில் கூட்டம் இல்லை.

ரூபலா கேட்டாள்: "திடீர்னு உங்களுக்கு என்னாச்சு...? நிஜமாவே இங்கே ஒருத்தரை பார்க்கணுமா...?"

"ஆமா..."

"படுத்தாதீங்க என்னை! உங்களைப் பத்தி எனக்குத் தெரியும்..."

"பேசாமல் வா... சொல்றேன்..."



"என்ன...?"

லிஃப்ட்டில் உயர்ந்து இரண்டாவது மாடிக்கு வந்தார்கள். வராந்தாவில் யாரும் இல்லை.

விவேக் அந்த ஜன்னல் அருகே வந்து ஒண்டிக் கொண்டு நின்றான். மெல்லக் கூப்பிட்டான்.

"ரூபலா..."

"ம்..."

"இப்படி ஜன்னல் பக்கமா ஒண்டிக்கிட்டு நாம வந்த டாக்ஸியைப் பாரு..."

பார்த்தாள் ரூபலா.

"தெரியுதா...?"

"ம்... தெரியுது..."

"அதுக்கு கொஞ்சம் தள்ளி... ஒரு க்ரே கலர் மெட்டாடர் வேன் நிக்குது தெரியுதா?"

"ஆமா... தெரியுது..."

"அந்த வேன் நம்ம டாக்ஸியை ஹோட்டலிலிருந்து நாம புறப்பட்ட நிமிசத்திலிருந்து ஃபாலோ பண்ணுது..."

"நம்ம டாக்ஸியை அந்த வேன் ஃபாலோ பண்ணுதா...?"

"ஆமா... ஹோட்டலிலிருந்து நாம வெளியே வர்றப்பவே ரோட்டுக்கு எதிர் சைடில் அந்த க்ரே நிற வேன் நின்னுட்டிருந்ததைப் பார்த்தேன். ஒரு பொண்ணு உள்ளே உட்கார்ந்துட்டிருக்கிற மாதிரி தெரிஞ்சுது. கையில டிரான்சிஸ்டர் மாதிரி ஒரு கருவி.

நாம டாக்ஸியை பிடிச்சு மூவ் ஆனதுமே – அந்த வேனும் மூவ் ஆனது. நான் கண்ணாடியில் பார்த்துட்டே வந்தேன். அவங்க ஃபாலோ பண்றது உண்மையா இல்லையான்னு தெரிஞ்சுக்கத்தான் டிரைவரை டாக்ஸியை மயூரா டவர்ஸ்க்கு திருப்பச் சொன்னேன். அந்த வேனும் இப்ப இங்க வந்து டாக்ஸியை விட்டு தள்ளி நிக்குது..."

ரூபலாவுக்கு வியர்த்தது.

"என்னங்க... அது? வேன்ல இருக்கிறது யாரு?"

"தெரியலை... அதைத்தான் இப்ப கண்டுபிடிக்கப் போறோம். இங்க நாம ஏதோ ஷாப்பிங் பண்றதுக்காகத்தான் வந்திருக்கிறதா வேன்ல இருக்கிற ஆட்கள் நினைச்சி வெயிட் பண்ணிட்டிருப்பாங்க... நான் இப்போ ஒரு காரியம் பண்ணப் போறேன்..."

"என்னங்க?"

"நீ... இந்த ஜன்னலை விட்டு அசையாமே, அந்த வேனையே பார்த்துட்டிருக்கணும். நான் போலீஸ் கண்ட்ரோல் ரூமுக்கு தகவல் கொடுத்துட்டு வர்றேன்..."

## 3

அதே விநாடிகளில் –

டெல்லி லோகமான்ய திலக் ஹாஸ்பிடல். டாக்டர் கிஷோர் குமார் முழு வழுக்கை, ரிம்லஸ் கண்ணாடி, அரைக்கை வெள்ளைக் கோட் சகிதம் டெலிபோனில் பதட்டமாய் பேசிக் கொண்டிருந்தார்.

"ஹலோ... மிஸ்டர் ஜெயகர்..."

"எஸ்... ஹோல்டிங்..."

"ஜெயகர்! நீங்க உடனே ஹாஸ்பிடலுக்கு வரணும்..."

"என்ன டாக்டர்? எனிதிங்க் ராங்...?"

"எஸ்... உங்க ஒய்ஃப் ராகினியை பெட்ல காணோம்..."

"எ...ன்...ன...து...?"

"எங்கே போனாங்கன்னு தெரியலை... ஹாஸ்பிடல் முழுவதும் அலசி பார்த்துட்டோம்... வீட்டுக்கு ஏதாவது புறப்பட்டு வந்தாங்களான்னு தெரிஞ்சுக்கத்தான் போன் பண்ணினேன்..."

"என்ன டாக்டர்.... விளையாடறீங்களா? மனநிலையும் உடல்நிலையும் பாதிக்கப்பட்ட பேஷண்ட்டை எப்படி நீங்க வெளியே போகவிடலாம்...? நர்ஸஸ் என்ன பண்ணிட்டிருந்தாங்க...?"

"ஸாரி ஜெயகர்...! ஒரு வி.ஐ.பி.யோட மனைவிக்கு ஒரு எமர்ஜென்ஸி ஆபரேஷன் பண்ண வேண்டியிருந்தது. அதுவுமில்லாமே ஒரு பஸ் ஆக்சிடெண்ட்ல சிக்கி, ஏழெட்டு பேர் சீரியஸான ஸ்டேஜில்..."

டாக்டர் முடிக்கவில்லை.

ஜெயகர் மறுமுனையிலிருந்து ரிசீவரே

தெறித்துப் போகும்படியாய் கத்தினான்.

"ஐ டோண்ட் வாண்ட் எனி ப்ளடி எக்ஸ்ப்ளனேஷன்ஸ் ஃப்ரம் யூ...! ராகினியை உணர்வற்ற நிலையில் வெச்சிருந்துதானே... ட்ரீட்மெண்ட் குடுத்துட்டிருந்தீங்க...? அவ எப்படி வெளியே போனா....?"

"தெரியலை ஜெயகர்... உணர்வற்ற நிலையில் இருக்கிறதுக்காக காலையில எட்டு மணிக்கு ஒரு இஞ்செக்ஷனை போடுவோம்... எமர்ஜென்ஸி கேஸ்கள் வந்ததாலே... ராகினிக்கு இஞ்செக்ஷன் போட மறந்துட்டோம்..."

"ராகினி காணாம போனது உங்களுக்கு எப்ப தெரிஞ்சது?"

"ஒரு மணி நேரத்துக்கு முந்தி..."

"அவ... இங்கே வீட்டுக்கும் வரலை..."

"நீங்க உடனே இங்கே புறப்பட்டு வாங்க... ஜெயகர்... மேற்கொண்டு என்ன செய்யணுமோ... அதைப்பத்தி பேசுவோம்..."

## 4

"எவனாவது என்னைத் தொட்டீங்க... உடம்பு பூராவும் ரத்தக்களறியாயிடும். என்னை பைத்தியம்னா சொன்னீங்க... ஐயாம் ராகினி ஜெயகர், ஒய்ஃப் ஆப் ஜெயகர். எத்தனை வருசமா இந்தக் காலேஜுக்கு வந்துட்டும் போயிட்டும் இருக்கேன்... ஐயாம்... தப்ரொபசர் ஆஃப் கெமிஸ்ட்ரி



டிபார்ட்மெண்ட்..."

பிரின்சிபால் மிஷ்ரா உடனே சமயோசிதமாய் செயல்பட்டார். "ஸாரி... மிஸஸ் ராகினி ஜெயகர்... நாங்கதான் உங்களை புரிஞ்சுக்கலை... நீங்க ராகினி ஜெயகர்தான்... ஐ... அக்ரி வித் யூ... கையில் வெச்சிருக்கிற கண்ணாடித் துண்டை அந்த பாஸ்கட்ல போட்டுட்டு அட்டெண்டன்ஸ் ரெஜிஸ்டர்ல கையெழுத்து போடுங்க... ப்ளீஸ்..."

ராகினி உடனே மலர்ச்சிக்கு போனாள். "இப்பவாவது என்னை தெரிஞ்சுட்டீங்களே...?"

கையில் வைத்திருந்த கண்ணாடித் துண்டை 'வேஸ்ட் பின்'னில் போட்டுவிட்டு, ரெஜிஸ்டரை நோக்கிப் போனாள். பிரின்சிபால் மிஷ்ரா ப்யூன்களுக்கு கண்ணைக் காட்ட, அவர்கள் சட்டென்று அவள் மேல் பாய்ந்து - புஜங்களைப் பற்றினார்கள்.

"டேய்ய்... விடுங்கடா..."

மிஷ்ரா கத்தினார். "இவளைக் கொண்டு போய் அந்த .ரூம்ல அடைங்க... அடைக்கிறது மட்டுமில்லை... நாற்காலியோடு சேர்த்து கட்டிப் போடுங்க... நான் போலீஸுக்கு இன்ஃபார்ம் பண்றேன்..."

ராகினி கத்தக் கத்த அவளை வராந்தாவின் கோடியில் இருந்த அறைக்கு தள்ளிக்கொண்டு போனார்கள். மாணவர்களும் மாணவிகளும் ஆங்காங்கே நின்று வேடிக்கைப் பார்த்தார்கள்.

ராகினி திமிறினாள்.

"டேய்... விடுங்கடா..."

."பேசாமே வரணும்..."

"என்னை இப்படி நடத்தறதுக்கு நான் சும்மா இருக்க மாட்டேன். உங்க மேல மான நஷ்ட வழக்கு போட்டு கோர்ட்டுக்கு இழுப்பேன்..."

"இழு... இழு..."

"உங்களையெல்லாம் டிஸ்மிஸ் பண்ண வைப்பேன்..."

"சரிதான்...."

வராந்தாவில் நின்றிருந்த மாணவர்களும் மாணவிகளும் சுவாரஸ்யம் காட்டாமல் அவளைப் பார்த்தார்கள்.

"யார்ரா அது?"

"பார்த்தாலே தெரியலை... மெண்டல் கேஸ்..."

"என்ன ரகளை?"

"தெரியலை... பிரின்சிபால் ரூம்ல அவரை கொல்லப் பார்த்தாளாம்..."

"படிச்சவளாட்டம் தெரியறா..."

அறைக்குள் நுழைந்தார்கள். ராகினியை கனமான மரநாற்காலியில் உட்கார வைத்து கயிற்றால் கட்டிப் போட்டுவிட்டு கதவைச் சாத்திக் கொண்டு வெளியேறினார்கள்.

ராகினி வாய்விட்டுக் கத்தினாள்.

"அடப்பாவிகளா... என்னை உங்களுக்குத்



தெரியலையா...? ஐயாம் ராகினி ஜெயகர்..."

கத்திக்கொண்டே திரும்பியவளின் பார்வை பக்கவாட்டில் இருந்த நிலைக் கண்ணாடியின் மேல் விழ -

ஆச்சர்யப்பட்டாள்.

'கண்ணாடியில் யாருடைய முகம் அது...'

முகத்தை அசைத்தாள்.

கண்ணாடியில் அந்த முகமும் அசைந்தது.

அதிர்ந்தாள் ராகினி.

'அப்படியானால் இது என்னுடைய முகமா...?'

'என் முகம் இப்படி இருக்காதே? இவ்வளவு பெரிய வாய் எனக்கு கிடையாது.'

'நெற்றி இப்படியா துருத்திக் கொண்டிருக்கும்...?'

'காதுகள், நாசி துவாரங்கள் - எல்லாமே வித்தியாசமாய் இருக்கிறதே...?'

'என்னுடைய பழைய முகம் எங்கே...?'

கண்ணாடியில் தெரிந்த தன் புதிய முகத்தையே வெறித்துப் பார்த்தாள் ராகினி. வயிற்றுக்குள் ஒருவித பயம் அமிலம் மாதிரி சுரந்து உள்ளுறுப்புகளை அவஸ்தைபடுத்தியது.

## 5

விவேக் போலீஸ் கண்ட்ரோல் ரூமை தொடர்பு கொண்டான். தன்னை யார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டதும் மறுமுனையில்

மரியாதை தொட்டுக் கொண்டது.

விசயத்தைச் சொன்னான் விவேக்.

"மயூரா டவர்ஸ்... ஃபோர் வீலர்ஸ் பார்க்கிங்கில் க்ரே கலர் மெட்டாடர் வேன் நின்றிருக்கிறது. வேனின் ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் சரியாக தெரியவில்லை. உள்ளே ஒரு பெண் இருக்கிறாள். வேறு யாராவது உடன் இருக்கலாம். எதற்காக என்னைப் பின்தொடர்ந்து வருகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. உடனே புறப்பட்டு வந்தால் வேனை மடக்கி ஆட்களைப் பிடித்துவிடலாம். போலீஸ் வாகனம் வேண்டாம். யூனிஃபார்மை தவிர்த்துவிட்டு ஒரு டாக்ஸியில் வாருங்கள். நானும் என் மனைவியும் இரண்டாவது மாடியில் இருக்கிறோம். நாங்கள் மயூரா டவர்ஸுக்குள் ஏதோ ஷாப்பிங் செய்வதாக நினைத்துக் கொண்டு அந்த வேன் எங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது. உடனடியாய் புறப்பட்டு வாருங்கள்."

விவேக் ரிசீவரை வைத்துவிட்டு, ரூபலா இருந்த இரண்டாவது மாடி ஜன்னலுக்கு வந்தான்.

திகைத்தான்.

ரூபலாவைக் காணோம்.

அவள் நின்றிருந்த இடம் வெறுமையாக இருந்தது.

# 6

ஜெயகர் வேக வேகமாய் ஹாஸ்பிடலுக்கு புறப்பட்டுப் போக தயாராகிக் கொண்டிருந்த



வேளையில் டெலிபோன் தன் வாயைத் திறந்தது. போய் ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ..."

"மிஸ்டர் ஜெயகர்...?"

"ஸ்பீக்கிங்..."

"ஐயாம் மிஷ்ரா. பிரின்சிபால், நேதாஜி என்ஜினியரிங் காலேஜ்."

"சொல்லுங்க சார்..."

"மிஸ்டர் ஜெயகர்... நீங்கள் உடனே புறப்பட்டு கல்லூரிக்கு வரவேண்டும்..."

"என்ன விசயம்?"

"உங்கள் மனைவி ராகினி இப்போது லீவில்தானே இருக்கிறார்கள்?"

"ஆமாம்..."

"சற்று நேரத்திற்கு முன்னால் ஒரு பெண் உங்கள் மனைவியின் பெயரைச் சொல்லிக் கொண்டு வந்து, வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட முயன்றாள். நான் தடுத்தேன். அதற்கு அவள் 'நான்தான் ராகினி ஜெயகர்' என்று சொல்லி ரகளை செய்து விட்டாள். ஒரு அறையில் போட்டு அடைத்து வைத்திருக்கிறோம். உடனே புறப்பட்டு வாருங்கள். உங்கள் மனைவி ராகினியையும் கூட்டிக் கொண்டு வாருங்கள். அடைத்து வைக்கப்பட்டது யார் என்பதையும் அவள் எதற்காக அப்படி நடந்து கொண்டாள் என்பதையும் நீங்கள்தான் சொல்ல வேண்டும்."

ஜெயகர் திடுக்கிட்டான்.

மறுமுனையில் மிஷ்ரா தொடர்ந்தார்.

"போலீஸுக்கு போன் செய்யலாம் என்று இருந்தேன். அதற்கு முன் உங்களோடு கலந்து பேச வேண்டும் என்று நினைத்து, உங்களுக்கு போன் செய்தேன்... உடனே புறப்பட்டு வருகிறீர்களா...?"

"வருகிறேன்..."

"சீக்கிரம் வாருங்கள்..."

ஜெயகர் ரிசீவரை வைத்துவிட்டு, அந்த நிமிசமே வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே காத்திருந்த ஸ்கூட்டரை உதைத்து புகை கக்க பறந்தான்.

டெல்லியின் காலை நேர போக்குவரத்து சிரமப்படுத்தினாலும் அரைமணி நேரத்திற்குள் நேதாஜி என்ஜினீயரிங் காலேஜைத் தொட்டு அதன் முகப்பில் வண்டியை கொண்டு போய் நிறுத்தி, பதட்டமாய் உள்ளே போனான்.

மிஷ்ராவும் புரபசர் தீட்சித்தும் எதிர்கொண்டார்கள். வராந்தாவில் ஆங்காங்கே வேடிக்கை பார்க்கும் மாணவ, மாணவியர் கும்பல்.

மிஷ்ரா கேட்டார்.

"உங்கள் மனைவி ராகினியை கூட்டிக்கொண்டு வரவில்லையா?"

ஜெயகர் பதில் சொல்லாமல் கேட்டான்.

"அந்தப் பெண் எங்கே?"

"அதோ அந்த அறையில்..."



அட்டெண்டர் ஒருவர் கதவைத் திறந்துவிட, மிஷ்ராவும் ஜெயகரும் உள்ளே நுழைந்தார்கள்.

நாற்காலியோடு சேர்த்துக் கட்டப்பட்ட ராகினி சுவரில் பதித்திருந்த நிலைக்கண்ணாடியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஜெயகர் அவளுக்குப் பக்கத்தில் போய் நின்றான்.

"ரா...கி...னி..."

மிஷ்ரா திடுக்கிட்டார்.

"ஜெயகர் வாட் டு யூ... ஸே...? இவங்க ராகினியா?"

"எஸ்... ஷி... ஈஸ்... ராகினி... என்னுடைய மனைவி... கடந்த ஒரு வார காலத்தில் அவளுடைய முகம் வெகுவாய் மாறிவிட்டது..."

மிஷ்ரா இன்னமும் பெரிதாய் திடுக்கிட்டார்.

"ராகினிக்கு முகம் மாறிவிட்டதா? என்ன சொல்கிறீர்கள் மிஸ்டர் ஜெயகர்...?"

"வாட் ஐயாம் ஸேயிங் ஈஸ் கரெக்ட் சார்... ராகினிக்கு பழைய முகம் காணாமல் போய்விட்டது. போன வாரம் கல்லூரியிலிருந்து திரும்பியவள் தலையை வலிக்கிறது என்று சொன்னாள். மாத்திரையும் சூடாய் காப்பியும் சாப்பிட்டு விட்டு படுத்துக் கொண்டாள். ராத்திரி எட்டு மணிக்கு வழக்கமாய் சாப்பிடுகிற டிஃபனை அவள் சாப்பிடவில்லை. ராத்திரி முழுவதும் காய்ச்சல் அடித்தது. டாக்டர் கிஷோர் குமார்க்கு போன் செய்து வரவழைத்தேன். அவர் சோதித்துப் பார்த்துவிட்டு 'இது புது மாதிரியான காய்ச்சலாய் இருக்கிறது. ஹாஸ்பிடலில் அட்மிட் செய்துதான் ட்ரீட்மெண்ட்

எடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார். உடனே அட்மிட் செய்தேன்....'

மிஷ்ரா திகைப்பாய் பார்த்துக் கொண்டிருக்க ஜெயகர் தொடர்ந்தான்.

"ஹாஸ்பிடலில் வைத்து ட்ரீட்மெண்ட் எடுத்ததில் ராகினிக்கு காய்ச்சல் குணமாயிற்று. ஆனால்... அவளுடைய முகத்தில் மாறுதல்கள் நிகழ ஆரம்பித்தன. இது எப்படி நிகழ்கிறது? எனக்கும் டாக்டர் கிஷோருக்கும் புரியவில்லை. ராகினியின் முகம் கொஞ்சம் கொஞ்சமாய் மாறிக் கொண்டு வருகிற விசயம் - வெளியே தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக, தனி அறையில் வைத்திருந்து கிஷோர் குமார் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொண்டிருந்தார். ராகினிக்கு தன்னுடைய முகம் மாறிவிட்டது தெரியவில்லை. அவளுக்கு அந்த உண்மை தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக அவளை மயக்க நிலையிலேயே வைத்திருந்தோம். மயக்கம் தெளிகிறபோது அவள் என்னைப் பார்த்துச் சொல்கிற வார்த்தை 'நான் காலேஜுக்குப் போக வேண்டும்... க்ளாஸ் எடுக்க வேண்டும்...!"

ராகினி ஒரு ஜடம் மாதிரி கண்ணாடியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க... ஜெயகர் சொன்னான். "இன்றைக்குக் காலை மயக்க நிலையிலிருந்து விழித்துக் கொண்ட ராகினி கல்லூரிக்குப் போக வேண்டும் என்கிற உணர்ச்சி உந்துதலால் - வெளியே வந்துவிட்டாள்."

"ஆச்சர்யமாக இருக்கிறதே...? முகம் எப்படி மாறும்? அது சாத்தியம் இல்லையே?"



"ராகினி விசயத்தில் அது சாத்தியப்பட்டு இருக்கிறது. அவளுடைய முகம் கொஞ்சம் கொஞ்சமாய் மாறிக் கொண்டு வருவதை நானும் டாக்டர் கிஷோர் குமாரும் கவனித்து வந்தோம்..."

சொன்ன ஜெயகர், நிலைக் கண்ணாடியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராகினியின் தோளைத் தொட்டான்.

"ராகினி..."

"..."

"ராகினி..."

அவளை பலமாய் அசைத்தான் ஜெயகர். நிலைத்த விழிகளோடு, ராகினியின் தலை ஒரு பக்கமாய் சரிந்தது.

கடைவாயில் ரத்தம் வழிந்தது.

அது சிவப்பாய் இல்லை.

பச்சை.

கரும்பச்சை ரத்தம்.

## 7

விவேக் தவிப்பாய் சுற்றும் முற்றும் பார்த்தான்.

'ரூபலா எங்கே போனாள்?'

ஜன்னலுக்குப் பக்கத்தில் வந்து நின்று ஃபோர் வீலர்ஸ் பார்க்கிங்கை எட்டிப் பார்க்க -

அந்த வேனைக் காணோம். அது நின்றிருந்த இடம் இப்போது வெறுமையாய் இருந்தது.

விவேக்கின் வயிற்றுக்குள் ஒரு பயம் சுழல் பந்துவிச்சு மாதிரி வந்து விழுந்தது.

'கீழே நின்றிருந்த வேனையும் காணோம்; ரூபலாவையும் காணோம்...!'

'என்ன நடந்தது?'

'டெலிபோன் செய்துவிட்டு வருவதற்குள் வேனில் வந்தவர்கள் ரூபலாவை...'

விவேக் பதட்டமாய் யோசித்துக் கொண்டிருக்கும்போதே -

அவனுடைய தோளில் கை விழுந்தது.

திரும்பினான்.

ரூபலா.

"மை குட்னஸ்...!"

கர்ச்சீப்பை எடுத்து, நெற்றி வியர்வையை ஒற்றிக் கொண்டான் விவேக். "என் வயித்துல பாலை வார்த்தே..."

"பயந்துட்டீங்களா?"

"பின்னே...?" பெருமூச்சு விட்டவன் கேட்டான்.

"எங்கே போயிருந்தே...?"

"நீங்க டெலிபோன் பண்ண போனதுமே - அந்த வேன் கிளம்ப ஆரம்பிச்சுடுச்சு... அவங்களுக்கு சந்தேகம் வந்திருக்கலாம். வேன் கிளம்பும்போது - வண்டியோட ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரைப் பார்க்க



முயற்சி பண்ணினேன். சரியா தெரியலை... உடனே க்ரௌண்ட் ஃப்ளோர்க்கு போனேன்..."

"நம்பரை நோட் பண்ணினியா...?"

"முடியலை... அதுக்குள்ளே வேன் கேட்டைத் தாண்டி ரோட்டுக்குப் போய் போக்குவரத்து நெரிசல்ல கலந்துடுச்சு... நாம அந்த வேனை ட்ரேஸ் பண்றதை எப்படியோ ஸ்மெல் பண்ணிட்டாங்க..."

"வா... கீழே போய் நிற்போம்... டெல்லி போலீஸ் அடுத்த ரெண்டு நிமிசத்துக்குள்ளே வந்துடுவாங்க..."

விவேக்கும் ரூபலாவும் கீழே போய் போர்டிகோ முகப்பில் கால் வைக்கும்போதே, அந்த டாக்ஸி வந்து நிற்க, அதிலிருந்து இரண்டு வழுக்கைகளும் ஒரு சர்தார்ஜியும் இறங்கினார்கள். சர்தார்ஜி குருதேவ் சிங் டெல்லியின் அசிஸ்டெண்ட் கமிஷனர்.

விவேக்கை அடையாளம் தெரிந்து கொண்டு பக்கத்தில் வந்தார்.

"எங்கே அந்த வேன்?"

"தப்பிவிட்டார்கள்..."

"எப்படி?"

"தெரியவில்லை. அவர்களுக்கு ஏதோ சந்தேகம் தட்டியிருக்க வேண்டும். நான் டெலிபோன் செய்துவிட்டு வருவதற்குள் கிளம்பிவிட்டார்கள்."

"நம்பரை நோட் செய்தீர்களா?"

"வேன் நின்ற பொசிஷன் நம்பரை பார்க்கும்படியாய் இல்லை..."

"வேனுக்குள் எத்தனை பேர் இருந்தார்கள்?"

"தெரியவில்லை. ஆனால் ஒரு பெண்ணை பார்த்தேன். அவள் கையில் டிரான்சிஸ்டர் மாதிரி ஒரு கருவி. வயர்லஸ்ஸாக இருக்கலாம்."

"நீங்கள் சிறிது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் மிஸ்டர் விவேக். டெல்லியில் கெட்ட காரியங்கள் நிறைய நடக்கின்றன. வெளிநாட்டின் சதித்திட்டங்கள் இங்கே இருக்கிற ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்களில்தான் முழுமை பெறுகின்றன. நீங்கள் டெல்லிக்கு வந்து தங்கியிருக்கிற விசயம் அப்பேர்ப்பட்ட கும்பலை உறுத்தியிருக்க வேண்டும். அதுதான் உங்களுடைய நடவடிக்கைகளை கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த வேன் ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் அநேகமாய் போலியாகத் தான் இருக்கும். அந்த க்ரே நிற வேன் இன்னமும் டெல்லியின் போக்குவரத்து நெரிசலில்தான் இருக்கும். மடக்க முடிகிறதா பார்ப்போம்..."

அசிஸ்டெண்ட் கமிஷனர் குருதேவ் சிங் தன் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த வயர்லெஸ்ஸை எடுத்து, டிராஃபிக் கண்ட்ரோலுக்கு தகவல் கொடுத்தார்.

"இந்த நிமிசம் டெல்லி போக்குவரத்து எல்லையில் இருக்கிற எல்லா க்ரே நிற மெட்டாடர் வேன்களையும் மடக்கி வையுங்கள். வேனில் இருப்பவர்கள் தப்பிக்க முயன்றால் முழங்காலுக்குக் கீழே சுட்டு வீழ்த்துங்கள்..."

அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே - விவேக்கின் பார்வை ஏதேச்சையாய் மயூரா



டவர்ஸ்க்கு எதிரே இருந்த அந்த பஸ் ஸ்டாப்புக்கு போக -

புத்தகம் பார்த்தபடி ஒரு பெண் தெரிந்தாள். பஸ் வருகிறதாவென்று அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாலும் அந்தக் காத்திருப்பில் நிஜம் இல்லை. அவளையுமறியாமல் அந்த போலித்தனம் வெளிப்பட்டது. பத்து விநாடிகளுக்கு ஒருமுறை பார்வை விவேக்கையும் போலீஸ் அதிகாரிகளையும் நனைத்தது.

விவேக்கின் கண்கள் அசிஸ்டெண்ட் கமிஷனரிடம் இருந்தாலும் பார்வை அந்தப் பெண்ணை திருட்டுத்தனமாய் எக்ஸ்ரே செய்து கொண்டிருந்தது.

கல்லூரி மாணவிபோல் இருந்தாள். ஊதா நிற சல்வார் கம்மீஸ். தோளில் ஒரு தோல்பை.

வயர்லஸ்ஸை அணைத்து, அதை பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு இருந்த அசிஸ்டெண்ட் கமிஷனரை ஏறிட்டான் விவேக், மெல்லிய குரலில் கேட்டான்:

"உங்களிடம் ரிவால்வர் இருக்கிறதா?"

"இருக்கிறது..."

"அதை பிறர்க்குத் தெரியாதபடி - ஒரு கர்ச்சீப்பில் சுற்றி என்னிடம் கொடுங்கள்."

"எதற்கு?"

"சொன்னால் சீன் கலைந்துவிடும்... நீங்கள் ரிவால்வரைக் கொடுத்துவிட்டு, வந்த

டாக்ஸியிலேயே ஏறிப் போய்விடுங்கள். விசயத்தைப் பிறகு சொல்கிறேன்..."

அசிஸ்டெண்ட் கமிஷனர் சற்று மறைவாய் நகர்ந்து தன் இடுப்பில் வைத்திருந்த ரிவால்வரை எடுத்து கர்ச்சீப்பில் போர்த்திக் கொடுத்தார். விவேக் அதை சட்டென்று வாங்கி, பேண்ட் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டான்.

"இனி... நீங்கள் புறப்படுங்கள்..."

அசிஸ்டெண்ட் கமிஷனரும் மற்ற இரண்டு பேரும் டாக்ஸியில் ஏறிக்கொண்டு குழப்பமான முகங்களோடு புறப்பட்டுப் போக ரூபலா கேட்டாள்.

"எதுக்காக துப்பாக்கியை வாங்கினீங்க?"

"ரூபலா நீ ரிசப்ஷன்ல உட்கார். இப்ப வந்துடறேன்..." சொன்ன விவேக் ரோட்டைக் கடந்து, எதிரே இருந்த அந்த பஸ் ஸ்டாப்பை நோக்கி வேகமாய் போனான்.

## 8

இன்ஸ்பெக்டர் பட்டேல் கையில் இருந்த ராகினியின் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை பிரித்து பார்த்துவிட்டு, எதிரே உட்கார்ந்திருந்த டாக்டர் ஓரியை குழப்பமாய் ஏறிட்டார்.

"டாக்டர்..."

"எஸ்..."

"ராகினியின் மரணம் எந்த வகையைச் சேர்ந்தது என்கிற கேள்விக்கு நேரே - எதுவும்



குறிப்பிடவில்லையே...?"

"காரணம் தெரிந்தால்தானே குறிப்பிட..."

"ராகினி கடந்த ஒரு வார காலத்தில் தன் முகத்தோற்றத்தை இழந்திருக்கிறாள். கடைசியில் கரும்பச்சை ரத்தம் கடைவாயில் வழிய இறந்திருக்கிறாள். ரத்தம் பச்சை நிறமாய் மாறியிருக்கிறது என்றால் அது விஷத்தின் அறிகுறிதானே...?"

"அது விஷத்தின் அறிகுறி இல்லை..."

"பின்னே..."

"ரத்தத்திற்கு சிவப்பு நிறத்தைக் கொடுக்கும் ஹீமோக்ளோபின் அதன் செயல்பாட்டை இழந்திருக்கிறது..."

"காரணம்...?"

"தெரியவில்லை..."

"ரசாயன பரிசோதனை என்ன சொல்கிறது?"

"குழப்புகிறது..."

"ஒருத்தர்க்கு முகம் மாறுவது சாத்தியமா டாக்டர்?"

"மெட்டாலிசம் ப்ராஸஸில் ஒரு பத்து சதவீதம் வரைக்கும் முகம் மாறலாம். கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்தால் சிலருக்கு உடம்பில் உள்ள கொழுப்புச்சத்து கரைந்து உடல் இளைத்து முகம் லேசாய் மாற்றம் அடையும். ஆனால் ஆரோக்கியமாய் இருந்த ராகினி ஒரு வார காலத்திற்குள் தன் பழைய முகத்தை தொலைத்தது ஆச்சரியமான ஒன்று."

"மருத்துவரீதியாய் இதற்கு என்ன காரணம் சொல்ல முடியும்...?"

"எதுவும் சொல்ல முடியாத நிலை... போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்ட ராகினியின் உடம்பை - மேலும் ஒரு வார காலத்திற்கு வைத்திருந்து பார்க்க டாக்டர் குழு முடிவு செய்துள்ளது."

"டாக்டர் கிஷோர் குமார் கொடுத்த ஸ்டேட்மெண்ட்டை படித்துப் பார்த்தீர்களா?"

"பார்த்தேன்... இன்று காலை எட்டு மணிக்கு சோதனை செய்வதற்காக ராகினியின் உடம்பிலிருந்து ரத்தத்தை எடுத்தபோது, ரத்தம் சிவப்பாய் இருந்ததாய் குறிப்பிட்டு இருக்கிறார். அதற்குப் பிறகு ராகினி கல்லூரிக்கு வந்து பிரின்சிபாலிடம் சண்டை போடும்போதுகூட நல்ல உணர்வு உள்ள நிலையில்தான் இருந்திருக்கிறார்... தான் ராகினி ஜெயகர் அல்ல என்று மற்றவர்கள் சொல்கிறார்களே என்ற அதிர்ச்சியில் - உடம்பில் நிகழ்ந்த ஏதோ ஒரு ரசாயன மாற்றம் அவருடைய உயிரை பறித்திருக்கிறது..."

அறைக் கதவு தட்டப்பட்டது.

"எஸ்..."

ஒரு இளம் டாக்டர் உள்ளே நுழைந்தார். முகம் பதட்டத்தில் இருந்தது.

"டாக்டர்...! ஒரு நிமிசம் மார்ச்சுவரிக்கு வர முடியுமா?"

"எனிதிங் ராங்...?"



"எஸ்... டாக்டர்... நாம் பாதுகாத்து வைத்திருக்கிற ராகினியின் உடம்பில்..."

"உடம்பில்..."

"வந்து பாருங்கள் டாக்டர்..."

இன்ஸ்பெக்டர் பட்டேலும், டாக்டர் ஓரியும், நாற்காலிகளை வேகமாய் தள்ளிக்கொண்டு எழுந்தார்கள்.

## 9

விவேக் ரோட்டைக் கடந்து - அந்த ஊதா நிற சல்வார் கம்மீஸ் அணிந்த பெண்ணை நெருங்கினான். அவள் புத்தகத்தைப் படிப்பதில் தீவிரமாய் இருந்தாள். விவேக் பக்கத்தில் வந்தபோதும் அவள் நிமிரவில்லை.

விவேக் கனைத்தான்.

அவள் சட்டென்று நிமிர்ந்தாள்.

"யா... யார்...?"

அவளுடைய பார்வை விவேக்கின் மேல் நிலைக்காமல் சத்தியமாய் எங்கோ போய் நிலைத்தது.

விவேக்கிற்கு சட்டென்று புரிந்தது.

இவள் பார்வையில்லாதவள்.

அவள் கையில் வைத்திருந்த புத்தகத்தைப் பார்த்தான். பார்வையற்றவர்கள் படிக்கும் ப்ரெய்ல் புத்தகம். அந்தப் பெண் திகைத்து "யா... யார்...?"

இந்தியில் மறுபடியும் கேட்டாள்.

விவேக்கும் இந்தியில் சம்பாஷித்தான்.

"உங்களுக்கு நான் உதவலாமா?"

"நன்றி! எனக்கொரு டாக்ஸியை ஏற்பாடு செய்து தர முடியுமா? வழக்கமாய் வரும் பஸ்ஸை இன்னும் காணோம்..."

"பார்வையில்லாத நீங்கள் இப்படி வெளியே வரலாமா?"

அவள் சிரித்தாள்.

"ஐந்து வயதிலிருந்து எனக்கு பார்வையில்லை. இந்த டெல்லியில் இருபது வருசமாய் தனியாகப் போகிறேன். வருகிறேன்..."

"உங்களுக்குத் துணை...?"

"இதுதான்...."

கையில் மடக்கி வைத்திருந்த கைடு ஸ்டிக்கை காட்டினாள் அவள்.

"நீங்கள் எங்கே போக வேண்டும்?"

"அக்ராணி காலனி...."

"உங்கள் பெயரைத் தெரிந்து கொள்ளலாமா?"

"ஷ்யூர். நான் ரேஷ்மா. டாட்டர் ஆஃப் குல்கர்ண - ரிடையர்ட் லெப்டினெண்ட் ஆபீஸர்...."

"இங்கேயே இருங்கள் ரேஷ்மா... நான் போய் டாக்ஸியை கொண்டு வருகிறேன்..." சொன்ன விவேக் ரோட்டைக் கடந்து மயூரா டவர்ஸ்க்குள் நுழைந்தான்.



ரிசப்ஷனில் காத்திருந்த ரூபலா கேட்டாள்.

"எங்கே போயிருந்தீங்க?"

"டவர்ஸ்க்கு எதிர்த்தரப்பில் இருக்கிற பஸ் ஸ்டாப்பில் ஒரு பெண் சந்தேகம் வர்ற மாதிரி நின்னுட்டிருந்தா. நம்ம டாக்ஸியை ஃபாலோ பண்ணிட்டு வந்த கும்பலைச் சேர்ந்த பொண்ணா இருக்கலாமோன்னு... நினைச்சு அவளை மடக்கப் போனேன். பக்கத்துல போய் பார்த்தா... ஷி இஸ் ஏ ப்ளைண்ட் லேடி...! பஸ்ஸுக்காக காத்திட்டிருக்கா... வழக்கமா வர்ற பஸ் வரலையாம். டாக்ஸி வேணும்னு சொன்னா.. நாம வந்த டாக்ஸியை அவளுக்கு அனுப்பிடுவோமா?"

"பொண்ணா...?"

"ம்..." தலையசைத்த விவேக் பஸ் ஸ்டாப்பை திரும்பிப் பார்க்க - திடுக்கிட்டான்.

அவளைக் காணோம்.

பஸ் ஸ்டாப் வெறிச்சிட்டது.

## 10

இன்ஸ்பெக்டர் பட்டேலும் டாக்டர் ஓரியும் மார்ச்சுவரிக்குள் நுழைந்தார்கள். அந்த இளம் டாக்டர் முன்னால் நடந்து போய் - அந்த ஐஸ் பாக்ஸுக்கு பக்கத்தில் நின்றார். பாக்ஸ் மரப்பலகை மூடியால் மூடப்பட்டிருக்க - கொஞ்சம் தள்ளி நின்றிருந்த ஸ்கேவன்ஜர்க்கு கண்ணைக் காட்ட -

அவன் மரப்பலகை மூடியை அகற்றினான்.

உள்ளே -

ஐஸ் பாலம் மத்தியில் ராகினியின் உடல்.

வெற்றுடம்பு.

டாக்டர் ஓரியின் பார்வை திகைத்தது.

ராகினியின் உடம்பு பூராவும் கத்திரிப்பூ நிறத்தில் சின்னச் சின்ன கொப்பளங்கள்.

'உயிரற்ற உடம்பில் கொப்பளங்கள் வர சாத்தியமே இல்லையே...?'

இளம் டாக்டரிடம் கேட்டார்.

"இதை எப்போது பார்த்தீர்கள்?"

"ஐந்து நிமிடங்களுக்கு முன்புதான்..."

"கெமிக்கல் ஃபாரென்ஸிக் லாப்க்கு போன் செய்து தகவல் கொடுங்கள்..."

"எஸ்... டாக்டர்..."

அவர் தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே -

ஐஸ் பாக்ஸுக்குள் அந்த சத்தம் கேட்டது.

'ச்சட... ச்சட... ச்சட...'

மூன்று பேர்களின் பார்வையும் பயமாய் ஐஸ் பாக்ஸுக்குள் போக - பெரிய அதிர்ச்சி அவர்களை ஆட்கொண்டது.

ராகினியின் உடம்பைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருந்த பனிக்கட்டிகள் தன்னிச்சையாய் உடைய ஆரம்பித்தன.



# 11

இரவு பத்தரை மணி.

ஹோட்டல் அறைக்குள் இருந்தார்கள் விவேக்கும் ரூபலாவும். டி.வி. திரையில் ஒரு இந்தி திரைப்படம்.

விவேக் மல்லாந்து படுத்து "சே!" என்றான்.

கம்பளிப் போர்வைக்குள் இருந்த ரூபலா டி.வியினின்றும் கலைந்து விவேக்கைப் பார்த்தாள்.

"என்ன?"

"எவ்வளவு சுலபமா ஏமாந்து போயிருக்கேன்...?"

"இன்னும் அதையே நினைச்சுக்கிட்டு இருக்கீங்களா?"

"நினைக்காம எப்படி இருக்க முடியும் ரூபலா...? எவ்வளவு தத்ரூபமா ப்ரெய்ல் புத்தகத்தையெல்லாம் கையில வெச்சுகிட்டு நடிச்சா தெரியுமா? கொஞ்சம்கூட பிசிறில்லாத நடிப்பு..."

"எந்தப் பிக்கலும் பிடுங்கலும் இருக்கக்கூடாதுங்கிறதுக்காக டெல்லிக்கு வந்தா... இங்கேயும் ஒரு பிரச்னை. வேன்ல ஃபாலோ பண்ணிட்டு வந்தது யாரு...? குருட்டுப் பொண்ணா நடிச்சு நிமிச நேரத்துல தப்பிச்சுட்டுப் போயிட்ட அந்தப் பெண் யாரு? எல்லாமே குழப்பமாயிருக்கு...! என்னாங்க...!"

"ம்..."

"டெல்லிக்கு டாட்டா காட்டிட்டு மெட்ராஸ் போயிடலாமா?"

"அவங்க யாருன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?"

"உங்களுக்கு... எதுக்கு அந்த வீண் வேலை...? டெல்லி போலீஸுக்கு விசயத்தை சொல்லிட்டீங்கள்ள...? அவங்க கண்டுபிடிச்சுடுவாங்க..."

"ரூபலா..."

"ம்..."

"நீ வரவர கோழையாயிட்டே...! கல்யாணமான புதுசுல நீ எவ்வளவு துணிச்சலா இருந்தே...? அந்த துணிச்சலெல்லாம் இப்ப எங்கே...? எதைப் பார்த்தாலும் ஒரு சாதாரண கிராமத்துப் பொண்ணு மாதிரி பயப்பட ஆரம்பிச்சுட்டே... பாரத் பிறந்ததிலிருந்துதான் நீ இப்படி மாறிட்டேன்னு நினைக்கிறேன்... சரியா....?"

ரூபலா தன் பெரிய கண்களில் கோபம் காட்டினாள்.

"என்ன சொன்னீங்க... நானா கோழை....?"

"மகா கோழை..."

"இது கோழைத்தனம் இல்லீங்க... உங்க மேல எனக்கு இருக்கிற அக்கறை. உங்களுக்கு ஏதாவது ஒண்ணு ஆயிடக்கூடாதேங்கிற ஒரு சின்ன பயம். அவ்வளவுதான்... இருக்க வேண்டிய ஜாக்ரதையில் நாம இருந்துக்கிறது நல்லதில்லையா? அதுக்காகத் தான்..."

"சும்மா சப்பைக்கட்டு கட்டாதே...! ஒரு க்ரைம்



ப்ராஞ்ச் ஆசாமிக்கு வாழ்க்கைப்பட்ட நீ புலி மாதிரி இருக்க வேண்டாம்...? இப்படி பூனை மாதிரி இருக்கியே...!"

ரூபலா தன் இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்தாள்.

"நான் புலிதான்..."

"அதை நான் நம்பணும்னா... நீ இந்த கேஸ்ல என்கூட ஒத்துழைக்கணும். நம்ம டாக்ஸியை ஃபாலோ பண்ணிட்டு வேன்ல வந்தது யாரு? குருட்டுப் பொண்ணா நடிச்சு... கண்ணிமைக்கிற நேரத்துக்குள்ளே என்கிட்டயிருந்து தப்பிச்சுட்டுப் போன பொண்ணு யாரு...? இதையெல்லாம் நாம கண்டுபிடிக்கணும்..."

"ப்பூ...! இவ்வளவுதானா? இது என்ன கேஸ்...? தம்மாத்துண்டு கேஸ்... நான் ஒத்தையாவே நின்னு...."

டெலிபோன் அடித்தது.

விவேக் எழுந்து ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ..."

"மிஸ்டர் விவேக்... நான் ரேஷ்மா..."

"ரே... ரே... ரேஷ்மா....?"

"கண்ணு தெரியாத மாதிரி நடிச்சு உங்களை ஏமாத்திட்டு போன ரேஷ்மா... ஸாரி...?"

"ரேஷ்மா... நீ தமிழ்ல பேசறயே....?"

"நான் கும்பகோணத்துக்காரி சார்...."

"என்ன இதெல்லாம்...?"

"உங்ககிட்ட கொஞ்சம் விபரமா பேசனும் சார்...! அடுத்த பதினைஞ்சு நிமிச நேரத்துக்குள்ளே உங்க ரூமுக்கு வர்றேன்...."

"வா... எதுக்காக... குருட்டுப் பொண்ணு மாதிரி...?"

"அதிகம் கேட்காதீங்க... போன்ல எதுவும் வேண்டாம். நேர்ல வந்துடறேன்... பை... த... பை...."

"சொல்லு..."

"உங்க மனைவி ரொம்ப அழகா இருக்காங்க சார்..."

ரிசீவரை வைத்துவிட்டாள்.

ரூபலா கேட்டாள்.

"பேசினது ரேஷ்மாவா?"

"ஆமா..."

"என்னவாம்...?"

"நீ ரொம்ப அழகா இருக்கியாம்..."

ரூபலாவின் முகத்தில் உடனே சந்தோசம். அதைக் காட்டிக்கொள்ளாமல் கேட்டாள். "இதைச் சொல்றதுக்காகத்தான் போன் பண்ணினாளாமா...? எதுக்கு அப்படி நடிச்சாளாம்...?"

"இப்ப வந்து சொல்றாளாம்..."

"தமிழ்ல பேசினாளா?"

"ஆமா... கும்பகோணத்துக்காரியாம்..."

"எப்ப வர்றாளாம்...?"



"இன்னும் கால்மணி நேரத்துக்குள்ளே..."

"நான் அழகாயிருக்கேன்னு நிஜமா சொன்னாளா?"

"வந்ததும் அவகிட்டயே கேட்டு கன்ஃபர்ம் பண்ணிக்க.."

## 12

மத்திய ரசாயன ஆராய்ச்சி மையக் கட்டிடம் கரோல் பாக் போகும் ரோட்டில் காவி நிற டிஸ்டெம்பர் பூச்சோடு தெரிந்தது. சுற்றிலும் மரங்கள்.

உள்ளே இருந்த - கம்யூனிகேஷன் ஹாலில் ஃபாரன்சிக் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் நான்கு வரிசை நாற்காலிகளில் உட்கார்ந்திருக்க, சென்ட்ரல் கெமிக்கல் ரிசர்ச் சென்டரைச் சேர்ந்த சேர்மன் தனக்கு முன்னால் நீட்டிக்கொண்டிருந்த மைக்கில் கவலை முகமாய் பேசிக் கொண்டிருந்தார்.

"ராகினி ஜெயகர்க்கு நேர்ந்துள்ள கொடுமை நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று. ரத்தத்தில் உள்ள ஹீமோக்ளோபின் பச்சை நிறமாக மாறுவது நம்ப முடியாத மற்றொன்று. ராகினி ஜெயகரின் உடம்பில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் மருத்துவத் துறையை வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றன. இறந்து போன உடம்பில் நீலநிற கொப்புளங்கள் தோன்றுவதும் - உடம்பு கெட்டுப் போகாமல் இருப்பதற்காக - சுற்றிலும் வைக்கப்பட்டிருந்த பனிக்கட்டிகள் தானாக விரிசல் விட்டு சின்னச் சின்னத் துண்டுகளாக உடைவதும்... மருத்துவத்

துறையையும் விஞ்ஞானத் துறையையும் பீதியில் ஆழ்த்துகிற விசயங்கள்..."

போலீஸ் அதிகாரி ஒருவர் கேட்டார்.

"ரசாயன பரிசோதனையின் ரிப்போர்ட் என்ன?"

"ரிப்போர்ட் இன்னமும் தயாராகவில்லை..."

"காரணம் என்னவாக இருக்கும் என்பதை கண்டுபிடித்து விட்டீர்களா?"

"ஒரு கான்செப்ட் இருக்கிறது."

"என்ன?"

"இது ஒரு வகையான கெமிக்கல் ரியாக்ஷன்... அட்னரிலின் - கஃபின் - போன்ற ஒரு வகை ரசாயனம் உடம்புச் செல்களில் உறைந்து போயிருக்கிறது..."

"அட்னரிலின் கஃபின் எந்த மாதிரியான ரசாயனம்?"

"உடம்பின் வளர்சிதை மாற்றத்தை அரஸ்ட் செய்கிற குணாதிசயம் அந்த ரசாயனங்களுக்கு உண்டு. ஆனால் கரும் பச்சை ரத்தம், இறந்தபின் உடம்பில் ஏற்பட்ட நீலநிற கொப்புளங்கள், ஐஸ் பாளங்கள் உடைந்தது - இதற்கெல்லாம் அந்த ரசாயனங்கள் காரணமாய் இருக்க முடியாது..."

"பேப்பர்களுக்கு இந்தச் செய்தியை தெரியப்படுத்த வேண்டாம் என்று டாக்டர்கள் குழு கூறியுள்ளது. அவ்வாறு கூறப்பட்டதற்கு என்ன காரணம்?"

"பெரிதான காரணம் எதுவும் இல்லை.



பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தால், அவர்கள் அந்தச் செய்திக்கு கண்ணும் காதும் மூக்கும் வைத்து - பொதுமக்களிடையே பீதி கிளப்பும் வகையில், செய்திகளை வெளியிடுவார்கள். மருத்துவத் துறைக்கே காரணம் புரியாத நிலையில், பத்திரிகைகளைக் கண்டிக்கவும் முடியாது..."

டாக்டர் குழுவில் இடம்பெற்றிருந்த கிஷோர் குமார் எழுந்த நின்றார். "ராகினிக்கு ட்ரீட்மெண்ட் எடுத்த டாக்டர் என்கிற முறையில் ஒரு கருத்தை சொல்ல விரும்புகிறேன்..."

"சொல்லுங்கள்..."

"ராகினி ஜெயகர்... ஒரு கெமிஸ்ட்ரி புரபசர். அவர் வேலை பார்க்கும் கல்லூரியில் உள்ள வேதியியல் கூடம் அவருடைய பொறுப்பில் இருந்தது. ரசாயன பொருள்களை வாங்குவதும், அதை பரிசோதனைக் கூடத்தில் வைத்து பாதுகாப்பதும், தேவைப்படும்போது அதை எடுப்பதும் அவருடைய வேலை..."

"இதில் எங்கேயாவது தவறு நேர்ந்திருக்கும் என்று நினைக்கிறீர்களா?"

"ஆமாம்... கடந்த சில நாட்களில் கல்லூரியின் வேதியியல் கூடத்திற்காக என்னென்ன ரசாயனப் பொருட்கள் வாங்கப்பட்டன? அவைகள் எந்தெந்த வகைகளில் பாதுகாத்து வைக்கப்பட்டன என்பதைப் பற்றி கல்லூரி நிர்வாகத்திடம் விசாரிக்க வேண்டும்... சம்பவம் நடந்த அன்று ராகினி ஜெயகர் கல்லூரியிலிருந்து திரும்பும்போது, தலைவலியோடு

திரும்பியிருக்கிறார். அவருடைய உடலில் ஏற்பட்ட கடுமையான மாற்றங்களுக்கு - அந்த தலைவலிதான் முதல்படி..."

"அந்தத் தலைவலி எப்படி ஆரம்பமாயிற்று என்பதைக் கண்டுபிடித்தால் போதும். ஓரளவுக்கு உண்மை தெரிந்துவிடும்...."

கிஷோர் குமார் சொல்லிக் கொண்டிருக்கும்போதே டேபிளின் மேல் வைக்கப்பட்டிருந்த இன்டர்காம் பஸ்ஸர் கூப்பிட்டது.

சேர்மன் ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ..."

"சென்ட்ரல் கெமிக்கல் ரிசர்ச்....?"

"எஸ்..."

"மருத்துவப் பல்கலைக்கழக ஹாஸ்பிடலிலிருந்து பேசுகிறோம்."

"சொல்லுங்கள்... நான் சேர்மன்..."

"சார்... ராகினி ஜெயகரின் உடம்பை இனிமேலும் பாதுகாத்து வைக்க முடியாது...."

"ஏன்...?"

"உடம்பின் ஒவ்வொரு பாகமும் வெடித்துச் சிதற ஆரம்பித்துவிட்டது..."

# 13

விவேக்கும் ரூபலாவும் கதவு தட்டப்படுவதற்காக காத்திருந்தார்கள். நேரம் பத்தரை மணியிலிருந்து நழுவி பதினோரு மணிக்குப் போக - ரூபலா விவேக்கைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினாள்.

"மறுபடியும் ஏமாத்திட்டா..."

"இல்ல வருவா..."

"கால்மணி நேரத்துல வர்றேன்னு சொன்னா... இப்ப மணி 11.05..."

"வந்துருவா..."

"நான் தூங்கறேன்... விடிய விடிய... நீங்க முழிச்சுட்டு இருங்க..."

"நான் கீழே போய் ரிசப்ஷன் வரைக்கும் பார்த்துட்டு வர்றேன்...."

"நீங்க வெளியே போகாதீங்க...?"

"ஏன்?"

"இதுல என்னமோ சூழ்ச்சி இருக்கு..."

"என்ன சூழ்ச்சி?"

"எனக்கு சொல்லத் தெரியலை... பட் தேர் இஸ் சம்திங்...?"

"மண்டு..."

"இருந்துட்டுப் போறேன். இந்த ராத்திரி நேரத்துல உங்களை வெளியே வரவழைக்கிறதுக்கான முயற்சி இது..."

"நான் ஹோட்டலுக்கு வெளியே போகப் போறதில்லை. ரிசப்ஷன் வரைக்கும்தான்..."

"வேண்டாமே..."

www.cleanindians.com

ரூபலா விவேக்கின் கையைப் பற்றிய விநாடி -

டெலிபோன் அடித்தது.

"கும்பகோணத்துக்காரிதான்! என்னால வ முடியலை...! நீங்களே புறப்பட்டு வாங்கன் கூப்பிடப் போறா..."

விவேக் ரிசீவரை எடுத்தான்.

"எஸ்..."

கீழே ரிசப்ஷனிலிருந்து பேசினார்கள்.

"சார்... ஒரு நிமிசம் நீங்கள் கீழே வர முடியுமா?"

"என்ன விசயம்?"

"உங்களைப் பார்ப்பதற்காக ஒருவ வந்திருக்கிறார்...."

"ஆணா... பெண்ணா...?"

"ஆண்..."

"பெயர் என்ன சொன்னார்?"

"பிரிதிவிராஜ்...."

"வருகிறேன்..." விவேக் ரிசீவரை வைத்துவிட் ரூபலாவை ஏறிட்டான்.

"ரிசப்ஷன்ல பிரிதிவிராஜ்ன்னு யாரோ ஒருத்த என்னை பார்க்கிறதுக்காக வந்திருக்காராம்..."

"என்னமோ நடக்குது..."

"நீ இரு... நான் போய் பார்த்துட்டு வர்றேன்..."

"உங்களை தனியா போக விடமாட்டேன்..."

"சரி... நீயும் வா..."



"நாம சென்னையிலிருந்து டெல்லிக்குப் புறப்பட்ட நேரம் சரியில்லை. சர்வதேச திரைப்பட விழாவுக்கு பாஸ் கிடைச்சு என்ன பிரயோசனம்.... ஒழுங்கா ரெண்டு படத்தைக்கூட பார்க்க முடியலை..."

அறையைப் பூட்டிக்கொண்டு, வரவேற்பறைக்கு வந்தார்கள். சோபாவில் அவன் காத்திருந்தான்.

விவேக் அவனை நோக்கிப் போனான்.

"பிரிதிவிராஜ்...?"

"ஆமாம்..." என்றவன் தன் மார்புப் பகுதியில் மறைத்து வைத்திருந்த அந்த டயரியை எடுத்து நீட்டினான்.

"என்ன...?"

"ரேஷ்மா என்கிற ஒரு பெண் இந்த டயரியை உங்களிடம் கொடுக்கச் சொன்னாள்."

"ரேஷ்மா எங்கே?"

"எனக்குத் தெரியாது. நான் ஃபாக்டரியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். மினார் சாலையில் வளைவில் ஓடிவந்த ஒரு பெண் என் வண்டியை நிறுத்தி, மூச்சிரைக்க - கையில் வைத்திருந்த இந்த டயரியைக் கொடுத்து, 'விவேக் என்பவர் ஹோட்டல் மொகல் இண்டர்நேஷனல், ரூம் நம்பர் 545ல் தங்கியிருக்கிறார். அவரிடம் இந்த டயரியைக் கொடுத்துவிடுங்கள். அவர் என்னை எங்கே என்று கேட்டால் பிறகு நான் அவரை சந்திப்பதாக சொல்லுங்கள்' என்றாள். அந்தப் பெண் சொன்னபடி உங்களிடம் டயரியை சேர்ப்பித்து விட்டேன்."

"ரேஷ்மா ஏதாவது ஆபத்தில் இருந்தாளா?"

"எனக்குத் தெரியாது. அவசரம் என்று சொன்னதால் இந்த டயரியை உங்களிடம் கொண்டு வந்து கொடுத்தேன். நான் வரட்டுமா... இங்கிருந்து நான் மௌரியா காலனி போக வேண்டும்..."

பிரித்விராஜ் கிளம்பிப் போய்விட, விவேக் அந்த டயரியை புரட்டிப் பார்த்தான்.

சில பக்கங்களில் மட்டும் ஆங்கிலக் கிறுக்கல்கள்.

படித்து பார்த்தபோது பொன்மொழிகள்.

விவேக் பக்கங்களை புரட்டிக் கொண்டே வந்தான். 'செயலை விதையுங்கள் - பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள் - குணம் உண்டாகும். குணத்தை விதையுங்கள் - உங்கள் எதிர்காலம் உருவாகும்' - போர்மென்.

உடலுக்கு உணவு போல் உள்ளத்துக்கு பண்பாடு மிகவும் அவசியம்.

பெரிய வெற்றிகளுக்கு அடிப்படை பெரிய கொள்கைகளே.

விவேக் பக்கங்களைப் புரட்ட புரட்ட எல்லாமே பொன்மொழிகள்.

குழம்பினான். ரூபலா கேட்டாள்.

"ரேஷ்மா இந்த டயரியை எதற்காக இவ்வளவு அவசரமாய் கொடுத்து விட்டாள்...!"

"காரணம் இல்லாமல் கொடுத்து அனுப்பியிருக்க மாட்டாள். அறைக்குப் போய் நிதானமாய்ப் பார்க்க வேண்டும்."



இருவரும் அறைக்குத் திரும்பினார்கள்.

டயரியின் ஒவ்வொரு பக்கமாய் புரட்டினான் விவேக். டயரியின் ஒவ்வொரு தாள் கார்னரிலேயும் யாழி போன்ற சிங்கமுகத்தோடு கூடிய உருவத்தின் தலை சேலான இள நீல வர்ணத்தில் அச்சிடப்பட்டிருந்தது. டயரியின் முதல் சில பக்கங்கள் கிழிபட்டிருந்தன. கடைசி சில பக்கங்களும் காணாமல் போயிருந்தன.

"ரூபலா...!"

"ம்..."

"உனக்கு ஏதாவது பிடிபடுதா?"

"நஹி...! அந்த ரேஷ்மா.... எதிரிகளோட ஆள். உங்களை குழப்பறதுக்காக அவளுக்கு தெரிஞ்ச ஒருத்தன் மூலமா இந்த பொன்மொழிகள் டயரியை குடுத்துவிட்டிருக்கா..."

"இல்ல ரூபி... ரேஷ்மா ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் இந்த டயரியைக் குடுத்து..."

டெலிபோன் அடித்தது.

விவேக் ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ...!"

"மிஸ்டர் விவேக்...! நான் ரேஷ்மா... டயரி கிடைச்சதா...?"

"கிடைச்சது... ஒண்ணும் புரியலை..."

"புரியும்படியா சொல்றேன்... ராகினி ஜெயகர்னு ஒரு கெமிஸ்ட்ரி..."

"த்த்தட்ட்...."

மறுமுனையில் எதுவோ நொறுங்கும் சத்தம்.

விவேக் கத்தினான்.

"ஹலோ..."

"..."

"ரேஷ்மா... வாட் ஹேப்பண்ட்....?"

"...."

"ரேஷ்மா... ரேஷ்மா..."

மறுமுனையில் பயங்கர மௌனம்.

# 14

டெல்லி போலீஸ் ஹெட் குவார்ட்டர்ஸ். நேரம் நள்ளிரவு 12.15 மணி.

உதவி போலீஸ் கமிஷனர் வைகுந்த் - இன்ஸ்பெக்டர் பட்டேல் இருவரும் விவேக்கின் கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"யார் அந்த ராகினி ஜெய்கர்...?"

படேல் சொன்னார்: "அந்தப் பெண் ஒரு கெமிஸ்ட்ரி புரொபஸர் சார்... இன்றைக்கு காலையில்தான வித்தியாசமான முறையில் இறந்து போனாள்..."

"வித்தியாசமான முறை என்றால்...?"

படேல் நடந்த சம்பவங்களை சொல்லி முடிக்க, விவேக்கின் நெற்றியில் வியப்பு வரிகள்.



"ராகினி ஜெயகரின் முகம் மாறிவிட்டதா?"

"ஆமாம் சார்..."

"அவளுடைய மரணத்தில் எல்லாமே குழப்பம். பச்சை நிறமாய் ரத்தம் கக்கி செத்திருக்கிறாள். போஸ்ட் மார்ட்டத்தில் மரணம் எதனால் என்பது பிடிபடவில்லை. பிணத்தை பாதுகாப்பாய் ஐஸ் பெட்டியில் வைத்திருந்தபோது, உடம்பு முழுவதும் நீலநிற கொப்புளங்கள். அதற்கப்புறம் உடம்பு கெடாமல் இருப்பதற்காக உடம்பைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருந்த ஐஸ் கட்டிகள் தானாகவே நொறுங்கி உடைய ஆரம்பித்தன. கடைசியில் அவளுடைய உடலே துண்டு துண்டாய் வெடித்துச் சிதற உடம்பை அதற்கு மேலும் வைத்திருக்க முடியாத நிலையில் - எரித்து விட்டோம்."

விவேக் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு கேட்டான். "ராகினியின் கணவர் ஜெயகர் தன் மனைவியின் இந்த மரணத்தைப் பற்றி என்ன சொல்கிறார்...?"

"அவர் திகிலில் உறைந்து போயிருக்கிறார். அந்த வீட்டில் இருக்க பயந்து கொண்டு ஹோட்டலில் தங்கியிருக்கிறார். மனைவிக்கு யாரோ பில்லி சூன்யம் மாதிரி ஏதோ செய்துவிட்டார்கள் என்று சொல்கிறார்..."

விவேக் உதவி போலீஸ் கமிஷனரிடம் திரும்பினான். "மிஸ்டர் வைகுந்த்! காலையிலிருந்து இந்த டெல்லியில் எனக்கு நேரிட்ட சம்பவங்களும் ஆச்சர்யமாக உள்ளது. நானும் என் மனைவியும்

டாக்ஸியில் சாணக்யா தியேட்டர்க்கு படம் பார்க்க கிளம்பினால் - டாக்ஸியை ஒரு வேன் பின்தொடர்கிறது. நான் அதைத் தெரிந்து கொண்டு, டாக்ஸியை மதுரா டவர்ஸுக்கு போகச் சொல்லி, அங்கிருந்து போலீஸ்க்கு தகவல் கொடுக்க, வேனில் வந்தவர்கள் தப்பிவிட்டார்கள். அதற்குப் பிறகு அந்த ரேஷ்மா - குருட்டுப் பெண்ணாக நடித்து என்னை ஏமாற்றியவள் இன்று ராத்திரி பத்தரை மணிக்கு போன் செய்து உங்களிடம் விவரமாக பேச வேண்டும். கால்மணி நேரத்துக்குள் வருகிறேன் என்று சொன்னாள். அவள் வரவில்லை அரைமணி நேரத்துக்குப் பிறகு ஒரு ஆள் மூலமாய் டயரி ஒன்றைக் கொடுத்து விட்டாள். டயரியின் பக்கங்களில் ஆங்காங்கே பொன்மொழிகள். உருப்படியாய் எந்தத் தகவலும் இல்லை. டயரியைப் புரட்டிக் குழப்பிக் கொண்டிருக்கும்போதே, மறுபடியும் ரேஷ்மாவின் போன். டயரி கிடைத்ததா என்று கேட்டுவிட்டு, ராகினி ஜெயகரைப் பற்றி ஏதோ சொல்ல ஆரம்பித்தாள். மறுமுனையில் அவள் தாக்கப்படுகிற சத்தம் கேட்டது..."

சில விநாடிகளுக்கு அறையில் மௌனம் நிலவ, விவேக்கே அதை மறுபடியும் கலைத்தான். "யார் இந்த ரேஷ்மா? என் டாக்ஸியைப் பின்தொடர்ந்து வேனில் வந்த ஆட்கள் யார்? ராகினி ஜெயகரின் மரணத்தோடு ரேஷ்மா எப்படி சம்பந்தப்படுகிறாள்? ரேஷ்மா என்னிடம் என்ன சொல்ல வந்தாள்? ஆங்கில பொன்மொழிகளோடு கூடிய அந்த டயரி யாருடையது...?"



உதவி போலீஸ் கமிஷனர் வைகுந்த் மெல்லிய குரலில் கேட்டார்.

"சார்... அது தீவிரவாதிகளின் காரியமாய் இருக்கலாமா?"

"நான் அப்படி நினைக்கவில்லை. சம்பவங்கள் ஆங்காங்கே பதுங்கியிருக்கிற விதத்தைப் பார்த்தால் எதிரிகள் புத்திசாலித்தனமானவர்கள். காய்களை நிதானமாய் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்."

கண்ட்ரோல் அறையிலிருந்து அவசர செய்தி வந்ததற்கு அறிகுறியாய் - சிவப்புக் கண்ணோடு - டெலிபோன் அலற ஆரம்பித்தது.

விவேக் எழுந்து போய் ரிசீவரை எடுத்தான்.

"திஸ் இஸ் போலீஸ் ஹெட் குவார்ட்டர்ஸ்."

"சார்... இது கண்ட்ரோல் ரூம்..."

"சொல்லுங்கள்..."

"நீங்கள் சொன்னபடி - டெல்லியில் உள்ள அத்தனை டெலிபோன் பப்ளிக் பூத்களை அலசிப் பார்த்ததில், அமர்நாத் நகர் அருகே உள்ள ஒரு டெலிபோன் பூத்துக்குள் ஒரு பெண் கத்திக்குத்து காயங்களோடு கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது."

# 15

அமர்நாத் நகர் - நிஜாமுதீன் ஏரியாவில் இருந்தது. குறுகலான தெருக்கள். நள்ளிரவு வேளைக்கே உரித்தான நிசப்தத்தை அறுத்துக் கொண்டு - ஜீப் விரைந்து அந்தக் குறிப்பிட்ட

டெலிபோன் பூத்தை தொட்டபோது, பூத்துக்கு பக்கத்தில் அமர்நாத் போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஒருவரும் – சில கான்ஸ்டபிள்களும் நின்றிருந்தார்கள். ஜீப்பிலிருந்து இறங்கிய விவேக்கையும், உதவி போலீஸ் கமிஷனரையும் பார்த்து சல்யூட்டுக்கு வந்து தளர்ந்திருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் மௌனமாய் கூட்டிப் போய் பூத்துக்குள் விழுந்திருந்த ரேஷ்மாவைக் காட்டினார்.

உடம்பின் முக்கியமான கேந்திரங்களில் கத்திக்குத்துகளை வாங்கியிருந்ததில் நிறைய ரத்த சேதம். பூத்தில் இருந்த டெலிபோன் உடைந்து சிதறியிருந்தது.

விவேக் இன்ஸ்பெக்டரிடம் திரும்பினான்.

"எதையும் தொடவில்லையே?"

"இல்லை சார்... நான் இந்த ஸ்பாட்டுக்கு வந்தபோது இந்தப் பெண் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தாள்..."

"ஏதாவது பேசினாளா?"

"என்னைப் பார்த்ததும் திக்கித் திணறி இரண்டே இரண்டு வார்த்தை பேசினாள்."

"என்ன வார்த்தைகள் அது...?"

"நியூ டெல்லி எரிகிறது!"

"நியூ டெல்லி எரிகிறது...?"

"ஆமாம்..."

"இரண்டே வார்த்தைகள்தானா?"



"ஆமாம்... இந்த இரண்டு வார்த்தைகளையே மிகவும் கஷ்டப்பட்டுப் பேசினாள். பேசி முடித்ததுமே தலைசாய்ந்துவிட்டது."

விவேக் ஒருமுறை உச்சரித்துப் பார்த்தான்.

"நியூ டெல்லி எரிகிறது..."

"இதற்கு என்ன அர்த்தம்?"

"இட் மே பி ஏ கோட் வேர்ட் சார்..." இன்ஸ்பெக்டர் சொன்னார்.

"டெலிபோன் பூத்துக்குளு; இருக்கும் எந்த ஒரு பொருளையும் தொட்டு விடாமல் டெட்பாடியை மட்டும் வெளியே எடுத்து கிடத்துங்கள்..." விவேக் சொல்ல, ரேஷ்மா ரத்தமாய் பூத்தினின்றும் வெளியே கொண்டு வரப்பட்டு, தெருவிளக்கு வெளிச்சத்துக்கு கீழே கிடத்தப்பட்டாள். கழுத்துப் பகுதியில் தேங்கியிருந்த ரத்தம் இப்போது சாவகாசமாய் - கெட்டியாய் வழிந்தது.

விவேக் குனிந்து உடம்பில் ஏதாவது பொருள் தட்டுப்படுகிறதாவென்று தேடிப் பார்த்தான். எதுவும் தட்டுப்படவில்லை.

'பெண்ணே! என்னிடம் என்ன சொல்ல வந்தாய்?'

'அந்த ராகினி ஜெயகர் விவகாரத்தில் நீ எப்படி சம்பந்தப்படுகிறாய்?'

'ஆங்கிலப் பொன்மொழிகள் எழுதப்பட்ட டயரி யாருடையது?'

'நியூ டெல்லி எரிகிறது!...?'

'இது என்ன வார்த்தை...?'

'எந்த விபரீதத்திற்கு இது ஆரம்பம்?'

'சர்ர்ர் சர்ர்ர்ர்...'

விவேக் தன் தாடையைத் தடவிக் கொண்டே, ரேஷ்மாவை கவலையாய் பார்த்துக் கொண்டிருந்த விநாடி, அந்த வெள்ளை நிற அம்பாஸிடர் பூத்துக்கு பக்கத்தில் வந்து நின்றது.

கதவைத் திறந்து கொண்டு டி.ஜி.பி. வெளிப்பட்டார்.

விவேக் உட்பட அத்தனை பேரும் சல்யூட்டுக்கு வந்தார்கள். டி.ஜி.பி. விவேக்கிற்கு பக்கத்தில் வந்து நின்றார்.

"விசயம் கேள்விப்பட்டேன்.. பாடி எங்கே...?"

விவேக் கூட்டிப்போய் காட்டினான்.

ரேஷ்மாவை குனிந்து பார்த்த டி.ஜி.பியின் கண்கள் வேகமாய் சுருங்கியது. கேட்டார்.

"இந்தப் பெண்ணின் பெயர் என்னவென்று சொன்னீர்கள்?"

"ரேஷ்மா..."

"நோ.. ஷி இஸ் நாட் ரேஷ்மா... இந்தப் பெண் ரேஷ்மா இல்லை.. ஷர்மீ... ஷி... இஸ்... ஏ... சி.பி.ஐ. ஆபீசர்..."

# 16

"எனக்குத் தலையை சுத்துது..." ரூபலா



தலையைப் பிடித்துக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்தாள். நேரம் நள்ளிரவை தாண்டியிருந்தது. இரண்டு மணி.

விவேக் கண்ணாடி ஜக்கில் இருந்த தண்ணீரை டம்ளர்க்கு வார்த்துக்கொண்டே சொன்னான்.

"அவ ரேஷ்மா இல்லை... ஷர்மீ... ஒரு சிபிஐ ஆபீசர். சிபிஐ சீஃப்கிட்ட போய் கன்ஃபர்ம் பண்ணிகிட்டுத்தான் வர்றேன். அவ ட்யூட்டியில் ஜாய்ன் பண்ணி ஆறு மாசம்தான் ஆகியிருக்கு..."

"எதுக்காகவாம் இந்த ரேஷ்மா பெயர்...?"

"தெரியலைன்னு சிபிஐ சீஃப் ஆபீசர் சொல்றார். இண்டிவிஜுவல் டேலண்டைக் காட்டறதுக்காக சிபிஐ ஆபீசர்ஸ் தனிப்பட்ட முறையில் இண்ட்ரஸ்ட் எடுத்துக்கிட்டு கேஸ்களை கவனிக்கிறது உண்டாம். அதுமாதிரி ஷர்மீயும் ராகினியும் ஜெயகர் விவகாரத்தை கிளறிப் பார்க்கிறதுக்காக ரேஷ்மாங்கிற பேர்ல இன்வெஸ்டிகேஷனை ஆரம்பிச்சிருக்கலாம்."

"தனியா... அப்படிப்பட்ட வேலைகள்ல ஏன் இறங்கணும்..? இப்ப பாருங்க... செத்துட்டா.."

"புலம்பாதே... காலையிலிருந்து நடந்த விசயங்களைப் பார்க்கும்போது பிரமிப்பா இருக்கு... இதுவரைக்கும் நடந்ததைப் பேசி பார்ப்போம். உன்னோட மண்டைக்கும் ஏதாவது தோணும். எந்த ஒரு வஸ்துவையும் இளப்பமா நினைக்கக்கூடாது பாரு..."

ரூபலா முறைப்பதை பொருட்படுத்தாமல் விவேக்

ஆரம்பித்தான். "இன்னிக்கு காலையில நம்ம டாக்ஸியை வேன்ல வந்தவங்க ஃபாலோ பண்ணினாங்க. நாம போலீசுக்குத் தகவல் கொடுத்ததும் எப்படியோ தப்பிச்சுப் போயிட்டாங்க... அவங்க நம்மை ஏன் ஃபாலோ பண்ணணும்...? இந்தக் காரணத்தை யோசிச்சுப் பாரு..."

"என்ன காரணம்?"

"டெல்லியில ஏதோ விபரீதமா நடக்கப் போகுது. அந்தக் காரியத்தை பண்ணப் போகிற கும்பல் சர்வதேச படவிழாவுக்காக வந்திருக்கிற என்னை தப்பா நினைச்சிருக்கணும்..."

"தப்பான்னா...?"

"அவங்க போட்டிருக்கிற சதித் திட்டத்தை முறியடிக்கிறதுக்காக சென்னையிலிருந்து நான் வந்திருக்கிறதா நினைச்சிருக்கணும்... என்னோட நடவடிக்கைகளை கவனிக்கிறதுக்காக ஃபாலோ பண்ணியிருக்கணும்..."

"மே... பி... கரெக்ட்..."

"அப்புறம் ரேஷ்மா விசயத்துக்கு வருவோம். சிபிஐ ஆபீசரான ஷர்மீக்கு அந்த சதிக்கும்பல பத்தின தகவல் ஏதோ கிடைச்சிருக்கு. அது சம்பந்தமான இன்வெஸ்டிகேஷன்ல அந்தப் பெண் இறங்கியிருக்கணும்... அந்த முயற்சியில் ஒரு டைரி கிடைத்திருக்கலாம். அந்த டயரியைத்தான் ஒரு ஆள் மூலமா குடுத்து விட்டிருக்கா..."

ரூபலா குறுக்கிட்டு சொன்னாள். "டயரியை எடுத்துக்கிட்டு வந்த ஷர்மீயை அந்தக் கும்பல்



துரத்தியிருக்கு. அவ டெலிபோன் பூத்துக்குள் போய் உங்களுக்கு போன் பண்ணி விசயத்தை சொல்றதுக்குள்ளே... அந்தக் கும்பல் அவளைத் தீர்த்துக் கட்டிட்டாங்க... சரியா..."

"சரி..."

"இந்த ராகினி ஜெயகர் விவகாரம்தான் இடிக்குது. ராகினி ஜெயகர் ஒரு கெமிஸ்ட்ரி புரபஸர். திடீர்னு பத்து நாளைக்கு முன்னாடி தலைவலி வருது... காய்ச்சல் வருது... அவளுடைய கணவர் அவளை ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்றார். அட்மிட் பண்ணப்பட்ட ராகினிக்கு கொஞ்சம் கொஞ்சமா முகம் மாறுது. விசயத்தை வெளியே விடாமே - ட்ரீட்மெண்ட் எடுக்கிறாங்க. ஆனா ராகினி ஹாஸ்பிடலிலிருந்து எப்படியோ வெளியேறி - வேலை செய்யற காலேஜுக்கு போறா... அங்கே ரகளை பண்ணின பிறகு கரும்பச்சையா ரத்தம் கக்கி செத்துப் போயிடறா... போஸ்ட்மார்ட்டத்துக்கு ராகினியோட மரணம் பிடிபடலை. உடம்பை ஐஸ் கட்டிகளாலே பாதுகாத்து வைக்கிறாங்க... ஆனா உடம்புல ஏகப்பட்ட கெமிக்கல் ரியாக்ஷன். ரிப்போர்ட்டை படிக்க படிக்க ஆச்சர்யமாயிருக்கு..."

"எனக்கு ஒண்ணும் புரியவில்லை..."

"எனக்கு ஒரு விசயம் புரியுது..."

"என்ன...?"

"உன்னால இந்தக் கேஸுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை..."

# 17

மறுநாள் காலை 9 மணி.

விவேக்கும் ரூபலாவும் போலீஸ் ஏற்பாடு செய்து கொடுத்திருந்த காரில் ஜெயகரின் வீடு போய் சேர்ந்தபோது, அவன் போர்டிகோ படிகளில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ராகினியை இழந்த துக்கம் கண்களுக்கு கீழே கருவளையங்களாகத் தெரிந்தது. விவேக்கை பார்த்ததும் மலர்ந்தான். தமிழில் கேட்டான்.

"சார்... நீங்க க்ரைம் ப்ராஞ்ச் ஆபீசர் மிஸ்டர் விவேக்.."

விவேக் தலையசைத்தான். "உங்க மனைவியோட விபரீத மரணத்தைப் பத்தி விசாரிக்கிறதுக்காக வந்திருக்கேன்..."

"ப்ளீஸ் கம்... சார்..."

விவேக் கேட்டான். "ஜெயகர்! எங்கே வேலை பார்க்கறீங்க?"

"பார்லிமெண்டரி ஹவுஸுக்குள்ளே அசிஸ்டெண்ட் எலக்ட்ரிக்கல் என்ஜீனியரா இருக்கேன்... சார்..."

"உங்க மனைவி ராகினி ஒரு கெமிஸ்ட்ரி புரபசர். பத்து நாளைக்கு முன்னாடி வரை சந்தோசமா ஆரோக்கியமா இருந்தவங்க... அவங்களுக்கு நேர்ந்த விபரீத மரணத்தைப் பத்தி என்ன நினைக்கிறீங்க?"

ஜெயகரின் கண்களில் நீர் திரண்டது.



"சார்... நடந்ததையெல்லாம் நினைச்சு பார்க்கும்போது ஏதோ மாயாஜாலம் மாதிரி இருக்கு... ராகினியோட முகம் கொஞ்சம் கொஞ்சமா மாறிட்டு வர்றதை நானும் டாக்டர் கிஷோர் குமாரும் அதிர்ச்சியோடு அப்சர்வ் பண்ணிட்டு வந்தோம். கண்ணாடி இல்லாத அறையில் அவளை தங்க வெச்சு ட்ரீட்மெண்ட் எடுத்தார் டாக்டர். ராகினிக்கு மனநிலை லேசா பாதிக்கப்பட்ட மாதிரி இருந்தது. தான் வேலை செய்யற காலேஜைப் பத்தியே பேசிட்டிருந்தா... காலேஜுக்கு போகணும்... க்ளாஸ் எடுக்கணும்... எக்ஸாம் பக்கத்துல நெருங்கிட்டு வருது. ரிவிஷன் எடுக்கணும்... – முழிச்சிட்டிருக்கிற நேரம் பூராவும் அவளுக்கு இதே பேச்சுதான். நேத்து காலையில் டாக்டரும் நர்சுகளும் அஜாக்ரதையா இருந்த நேரத்துல காலேஜுக்கு கிளம்பிப் போயிட்டா..."

"தலைவலியோடு காலேஜிலிருந்து வந்ததா கேள்விப்பட்டேன்."

"ஆமா சார்... வந்ததும் மாத்திரை சாப்பிட்டுட்டு படுத்துட்டா... மிட்நைட்ல காய்ச்சல்... அதுக்கப்புறம்தான் ஹாஸ்பிடலுக்குப் போனேன்."

"ராகினிக்கு காலேஜில் ஏதாவது நடந்திருக்கும்னு நினைக்கிறீங்களா?"

"காலேஜுக்கும் போய் விசாரிச்சுப் பார்த்தேன். யார்க்கும் எதுவும் தெரியலை..."

"உங்க மனைவிக்கு வேண்டப்பட்ட நெருக்கமான தோழிகள் யாராவது இருக்காங்களா?"

"நோ... சார்... அப்படி யாரும் இல்லை. உத்யோகபூர்வமான பழக்கம்தான். வழியில பார்த்தா ஹலோன்னு சொல்றதோடு சரி..."

"ஷர்மீங்கிற பேரை கேள்விப்பட்டிருக்கீங்களா?"

"இல்லை..."

"ரேஷ்மா...?"

"இல்லை... யார் அவங்க?"

"ஷர்மீ ஒரு சிபிஐ ஆபீசர். ரேஷ்மாங்கிற பேரில் ஒரு இன்வெஸ்டிகேஷனை நடத்திட்டு வந்திருக்காங்க. உங்க மனைவியைப் பத்தின ஏதோ ஒரு விசயம் ஷர்மீக்கு தெரிந்திருக்கு. ஆனா அந்த ஷர்மீ இப்போ உயிரோடு இல்லை. நேத்து ராத்திரி அமர்நாத் நகர் டெலிபோன் பூத்துக்குள்ளே வெச்சு அவளை கொலை பண்ணியிருக்காங்க..."

ஜெயகர் திடுக்கிட்டான்.

"யா... யார்... சார்...?"

"உங்க மனைவியோட விபரீத மரணத்துக்கு காரணமானவங்க... அதைப் பத்தின விசயம் வெளியே தெரிஞ்சுடக் கூடாதுங்கிறதுதான் அவங்க நோக்கம்..."

"எல்லாமே குழப்பமாயிருக்கு சார்... நானும் ராகினியும் கல்யாணம் நடந்த நாள் முதலாய் ரொம்பவும் சந்தோஷமாய் இருந்தோம். என் ராகினி போல யாருக்கு என்ன கோபமோ தெரியலை. அவளை சித்ரவதை பண்ணி சாகடிச்சுட்டாங்க..."

கண்களில் நீர் தத்தளித்தது.



'இவன் அழுகை நிஜமா?'

விவேக்கின் பார்வை கூர்மையாயிற்று. கண்டுபிடித்தான்.

அவன் அழுகை நிஜம்தான். அவன் முகத்தில் வேதனை தெரிந்தது. உள்ளுக்குள் துக்கம் இருந்தால்தான் இப்படி கண்களில் அழுகை சீறும்.

விவேக் எழுந்து ஜெயகரின் தோளைத் தட்டினான்.

"இந்த மரணங்களுக்கு காரணமானவங்களை கண்டுபிடிச்சுடலாம். கவலைப்படாதீங்க ஜெயகர். ரூபலா...! அந்த டயரியை எடு...!"

ரூபலா கையல் இருந்த ப்ரீப்கேஸை பிரித்து அந்த டயரியை எடுத்துக் கொடுத்தாள்.

"ஜெயகர்! இந்த டயரியைப் பாருங்க... எல்லாம் ஆங்கில பொன்மொழிகளா இருக்கு... இது யாரோடதுன்னு சொல்ல முடியுமா?"

ஜெயகர் பார்த்துவிட்டு சொன்னான்.

"தெரியலையே..."

"உங்க மனைவி ராகினி வேலை பார்த்த காலேஜ் எங்கே இருக்கு?"

"மோதிலால் நேரு மார்க்ல..."

"இங்கிருந்து எவ்வளவு தூரம்?"

"கார்ல போனா பதினைஞ்சு நிமிசப் பயணம்..."

வெளியே வந்தார்கள். காரில் ஏறிக்கொண்டு போக வேண்டிய இடத்தை டிரைவரிடம் சொல்லிவிட்டு

சாய்ந்து உட்கார்ந்தார்கள்.

விவேக் கேட்டான். "ரூபலா! ஜெயகரைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?"

"பார்க்கவே பாவமா இருக்கு..."

"ராகினியோட மரணத்துக்கு ஜெயகர் காரணமாய் இருக்க முடியாதுன்னு நம்பறியா?"

"கண்டிப்பா... ராகினிக்கு காலேஜ்லதான் ஏதாவது நடந்திருக்கும்னு நினைக்கிறேன்..."

சட்டென்று கார் டிரைவரின் தோளைத் தொட்டான் விவேக்.

"டிரைவர்! ஸ்டாப் த... கார்..."

ரோட்டோரமாய் கார் கீறிச்சிட்டபடி ஒதுங்கி நின்றது.

ரூபலா விவேக்கை ஏறிட்டாள். "என்னங்க..."

"ஒரு நிமிசம்... கீழே இறங்கு..."

"எதுக்குங்க..."

"இறங்கு... சொல்றேன்..."

ரூபலா இறங்க அவளைத் தொடர்ந்து விவேக்கும் இறங்கினான். வந்த திசையில் பிளாட்பாரத்தில் நடந்தார்கள்.

ஐம்பதடி நடந்ததும் – சிமெண்ட் பலகையில் ஒட்ட வைத்திருந்த போஸ்டரைக் காட்டினான்.

ரூபலா பார்த்தாள்.

பழைய போஸ்டர் மாதிரி தெரிந்தது.



WELCOME TO
NEW FOREIGN
AMBASSADOR MR. NOVEA PETER
(ZANGOLIA)

ரூபலா போஸ்டர் வாசகங்களை படித்துவிட்டு சொன்னாள். "அதுல என்ன இருக்கு? ஜங்கோலியா நாட்டு தூதரை வரவேற்கிறதுக்காக போஸ்டர் அடிச்சு ஒட்டியிருக்காங்க... அதுவும் பழைய போஸ்டர். ஒட்டி ரெண்டு மூணு மாசம் இருக்கும் போலிருக்கு..."

விவேக் புன்னகைத்தான். "அந்த போஸ்டர்ல இருக்கிற முக்கியமான ஒண்ணை கவனிச்சியா...?"

"என்ன...?"

"போஸ்டரோட வலது பக்க மூலையைப் பாரு..."

பார்த்தாள். அவளுடைய சின்ன நெற்றி சுருங்கியது.

யாழி போன்ற சிங்க முகத்தோடு கூடிய உருவத்தின் தலை லேசான இள நீலவர்ணத்தில் அச்சிடப்பட்டிருந்தது.

"இது... இது...?"

"அந்த உருவத்தை எங்கே பார்த்தோம்னு ஞாபகம் வருதா?"

"வருது... நம்மகிட்ட இருக்கிற டயரியில் ஒவ்வொரு பக்க கார்னரிலேயும் லைட் ப்ளூ கலர்ல பிரிண்ட் பண்ணியிருந்தது..."

"கரெக்ட்..."

"அப்படின்னா... ஷர்மீ கொடுத்து அனுப்பிய டயரி ஒரு வெளிநாட்டு டயரி. அதாவது ஜங்கோலியா நாட்டு டயரி..."

"கரெக்ட்..."

"இந்த இருட்டு கேஸ்ல இப்பத்தான் ஒரு சின்ன ஜன்னல் திறந்திருக்கு..."

"என்ன பண்ணப் போறோம்...?"

"ராகினி வேலை பார்த்த காலேஜுக்கு போறதை கான்சல் பண்ணிட்டு பிடிஐ போறோம்..."

"பி.டி.ஐ..."

"ப்ரஸ் ட்ரஸ்ட் ஆஃப் இண்டியா..."

"எதுக்கு?"

"வா... தெரிஞ்சுக்குவே..." விவேக் சொல்லிவிட்டு காரை நோக்கிப் போக, ரூபலா பின்தொடர்ந்தாள்.

## 18

பிரஸ் ட்ரஸ்ட் ஆஃப் இண்டியா - முதல் மாடியில் இருந்த என்கொய்ரி கௌண்டர்க்குள் விவேக்கும் ரூபலாவும் உட்கார்ந்து ஃபுல் சூட் அணிந்த அந்த வழுக்கைத் தலை நபருடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

விவேக் கேட்டான். "ஜங்கோலியா உலக மேப்பில் எந்த இடத்தில் இருக்கிறது?"

"நெதர்லாண்ட்ஸுக்குப் பக்கத்தில்..."

"சிறிய நாடா...?"



"ஆமாம்..."

"இந்தியாவுக்கு நட்பு நாடா?"

"சென்ற வருசம் வரைக்கும் பகைமை பாராட்டிக் கொண்டிருந்த நாடு. இப்போது நட்புறவுக்கு கை கொடுத்து இருக்கிறது. எனவே தூதரகம் கொடுத்துள்ளோம். அந்த நாட்டின் சார்பாக தூதராக வந்திருப்பவர் மிஸ்டர் நோவியா பீட்டர்."

"தூதரக உரிமை எப்போது கொடுத்தோம்?"

"மூன்று மாதங்களுக்கு முன்னால்..."

"அங்கு மொத்தம் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்?"

"மொத்தம் ஆறு பேர்... அதில் மூன்று பேர் தாயகம் சென்றுவிட்டார்கள். இப்போது மூன்று பேர் மட்டுமே..."

"அம்பாஸிடர் நோவியா பீட்டர் இப்போது தூதரக இல்லத்தில்தானே இருக்கிறார்?"

"இல்லை... அவர் தற்சமயம் உடல்நலக் குறைவு ஏற்பட்டு மருத்துவ பரிசோதனைக்காக அமெரிக்கா போயிருக்கிறார்."

"ஜங்கோலியா நாட்டு தூதரகத்தில் இப்போது வேலை செய்கிற மூன்று நபர்களின் பெயர்களும் விவரங்களும் தேவை... இது ரகசியமாக இருக்க வேண்டும்."

"புரிகிறது. குறித்துக் கொள்ளுங்கள்... பால் ஆண்ட்ரே, நம்பர் 15, டெல்ஹௌஸி ரோட, ஜன்பாத். இரண்டாவது நபர் ஒரு பெண். பெயர்

ஜூலியானா. நெம்பர் 459, எம்பரர் ஷாஜகான் மார்க். மூன்றாவது நபர் ஹெரட்வின். இவர் தூதரக டிரைவர். தூதரக அவுட் ஹவுஸிலேயே தங்கியிருக்கிறார்."

ரூபலா விவரங்களைக் குறித்துக் கொண்டதும், விவேக் பி.டி.ஐ. நபரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான்.

காரில் போகும்போது ரூபலா சொன்னாள்.

"இது எனக்கு சரியா படலை..."

"எது?"

"தூதரக விஷயங்கள்ல தலையிடறது...! அவங்க காதுக்கு விசயம் போனா பிரச்னை வேற மாதிரி ஆயிடும். அந்த நாட்டு டயரி நம்ம கையில இருக்குங்கிறதுக்காக அவங்க மேல சந்தேகப்படறது என்ன நியாயம்?"

"அந்த நாட்டு டயரி ஷர்மீ கைக்கு எப்படி வந்தது? நாம வழியில போறப்ப கிடைச்ச டயரியில்லை இது. ஷர்மீ கொடுத்தனுப்பின டயரி. ஷர்மீ சாதாரண பெண்ணில்லை. ஒரு சிபிஐ ஆபீசர். காரணமில்லாமே டயரியை குடுத்துவிட மாட்டா... ராகினியோட விபரீத மரணத்துக்கும் அந்த ஜங்கோலியா நாட்டு தூதரக ஆட்களுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கு. ஷர்மீ உயிரை விடும்போது ஒரு வாக்கியத்தை சொல்லியிருக்கா - நியூடெல்லி எரிகிறது! வாக்கியமே விபரீதமா தெரியலை... சென்ற வருசம் வரைக்கும் ஜங்கோலியா இந்தியாவோடு பகைமை பாராட்டிகிட்டு இருந்த நாடு."

"ஏதோ... புரியற மாதிரி இருக்கு..."



"சந்தோசம்..."

"சரி... இப்ப என்ன பண்ணப் போறீங்க?"

"இப்ப... எதுவும் இல்லை..."

"பின்னே...?"

"ராத்திரி எட்டு மணிக்கு மேல தனியா நீ மட்டும்..."

"தனியா நான் மட்டும்...?"

"அந்த ஜூலியானா வீட்டுக்குப் போய்..."

"போய்...?"

"அவகிட்ட இந்த டயரியைக் காட்டி..."

"காட்டி...?"

"லேசா மிரட்டற மாதிரி பேசப் போறே... அவளோட ரியாக்ஷன் எப்படி இருக்குன்னு அப்சர்வ் பண்ணப்போறே...?"

"எனக்கு தீர்க்கமா ஒண்ணு புரியுது..."

"என்ன?"

"என்னை ஒழிச்சுக் கட்டறதுக்காகவே டெல்லிக்குக் கூட்டிட்டு வந்திருக்கீங்க?"

"அட... ஏன் பயப்படறே... ரூபி...?"

"பயப்படாமே எப்படீங்க இருக்க முடியும்? ராகினி ஜெயகர் எப்படி செத்தான்னு நினைச்சு பாருங்க... முகம் கொஞ்சம் கொஞ்சமா மாறி... அப்புறம் திடீர்னு பச்சையா ரத்தம் கக்கி செத்து... செத்த பின்னாடியும் உடம்பு பீஸ் பீஸா... சிதறி... நினைக்கிற போதே அடிவயித்தை பூனை பிறாண்டற மாதிரி இல்லை..."

"பூனை பிறாண்டினாலும் சரி; நாய் பிறாண்டினாலும் சரி இன்னிக்கு ராத்திரி... ஜுலியோனாவை நீ பார்க்கப் போறே..."

இருவரும் சண்டை போட்டுக் கொண்டே ஹோட்டல் வந்து சேர்ந்தபோது –

ரிசப்ஷனில் அந்த இளைஞன் காத்திருந்தான்.

விவேக்கைப் பார்த்ததும் எழுந்து வந்தான். அழகாய் இருந்தவனின் கண்களில் ஆழமான சோகம்.

"சார்... ஐயாம் அபிலாஷ்... ஷர்மீயை காதலித்தவன்... நான் உங்ககிட்ட பேசணும்... சம் பர்சனல்..."

விவேக்கின் நெற்றியில் ஒரு சின்ன ஆச்சர்ய சுருக்கம்!

"வா..."

# 19

தாழிட்ட ஹோட்டல் அறை.

"பேர் என்ன சொன்னே?"

"அபிலாஷ்..."

"நீயும் ஷர்மீயும் லவ்வர்ஸா?"

"ஆமா சார். கடந்த ஒரு வருசமாவே ஒருத்தையொருத்தர் விரும்பிட்டிருந்தோம்..." கண்களில் திடீரென்று நீர் பளபளத்தது. சிரமப்பட்டு அதை உள்வாங்கினான். தொண்டை கம்மலைப்



போக்க வாட்டர் ஜக்கில் தண்ணீர் குடித்தான்.

"என்கிட்ட என்ன பேசணும்?" விவேக் கேட்டான்.

"சார்... ஷர்மீயோட மரணத்துக்கு காரணம் யாருன்னு எனக்குத் தெரியும்."

"யார்?"

"ஜங்கோலியா தூதரகத்தைச் சேர்ந்த ஆட்களாய்த்தான் இருக்கணும்..."

"எப்படி சொல்றே?"

"ஷர்மீக்கு கடந்த ஆறுமாச காலமாய் அந்த ஜங்கோலியா தூதரகத்தைச் சேர்ந்த ஆட்களை ஃபாலோ பண்றதுதான் வேலை. எதுக்காக ஃபாலோ பண்றேன்னு கேட்டா... நம்ம நாட்டுக்கு பகையான நாடு அது. வல்லரசு நாடு ஒன்றின் சிபாரிசால் இந்தியாவுக்குள் தூதரக உரிமை பெற்று வந்திருக்கிறார்கள். ஒரு சிபிஐ ஆபீசர் என்கிற முறையில், அவர்களை கண்காணிக்கிறேன். அவ்வளவுதான் என்றாள். ஷர்மீ விதவிதமான வேஷங்களில், விதவிதமான பெயர்களில் அவர்களுடைய நடவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டிருந்தாள். நேற்றைக்கு காலை பத்து மணி அளவில் மயூரா டவர்ஸ்க்கு எதிரில், ரேஷ்மா என்கிற பெயரில் குருட்டுப் பெண்ணாய் நடித்தபடி நின்றிருந்தபோதுதான் அவளை நீங்கள் சந்தித்தீர்கள். உங்களைப் பார்த்ததும் ஷர்மீக்கு மகிழ்ச்சி கலந்த அதிர்ச்சி. அந்த சந்தர்ப்பத்தில் அவளால் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. காரணம் ஜங்கோலியா

தூதரகத்தைச் சேர்ந்த ஒரு ஆள் மயூரா டவர்ஸிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். அவனை ஃபாலோ செய்ய வேண்டி இருந்ததால் நீங்கள் கார் கொண்டு வர போனபோது ஷர்மீ நழுவி விட்டாள். இந்த விவரத்தையெல்லாம் அன்று மதியமே ஷர்மீ என்னிடம் சொன்னாள். மேலும் க்ரைம் ப்ராஞ்ச் ஆபீசர் விவேக் டெல்லியில் இருக்கிறார். அவரை சந்தித்து இந்த ஜங்கோலியா தூதரக ஆட்களைப் பற்றியும் அவர்களுடைய நிழலான காரியங்களைப் பற்றியும் சொல்ல வேண்டும் என்று என்னிடம் சொன்னாள். அதற்குள் அவளுக்கு இப்படியொரு முடிவு ஏற்பட்டுவிட்டது."

ரூபலா குறுக்கிட்டாள். "ஷர்மீ ஒரு சிபிஐ ஆபீசர். அதை உள்துறை அமைச்சகத்துக்கு தெரியப் படுத்தலாமே?"

விவேக் ரூபலாவை ஏறிட்டான். "தகுந்த ஆதாரமில்லாமல் ஒரு சிபிஐ ஆபீசர் ஒரு வெளிநாட்டு தூதரகத்தின் மேல் குற்றம் சுமத்தினால்... சர்வதேச விதிகள் ரீதியாய் கடுமையான பிரச்னைகளை இந்தியா சந்திக்க வேண்டி வரும்... ரூபலா!"

"இதையேதான் ஷர்மீயும் சொன்னாள் சார்..."

"ராகினி ஜெயகர்ங்கிற பொண்ணைப் பத்தி ஷர்மீ உன்கிட்ட ஏதாவது சொல்லியிருக்காளா?"

"இல்லையே...?"

"இந்த டயரியை யார்கிட்டயாவது பார்த்திருக்கியா?"

டயரியை எடுத்துக் காட்டினான் விவேக்.



அபிலாஷ் பார்த்துவிட்டு சொன்னான். "இல்லை சார்... இந்த டயரியை இன்னிக்குத்தான் முதன்முதலா நான் பார்க்கிறேன்..."

"நீ என்ன பண்ணிட்டிருக்கே?"

"பி.இ. எலக்ட்ரானிக்ஸ் முடிச்சுட்டு... எலக்ட்ரானிக் டிவைஸஸ் மானுபாக்சர் பண்ணிட்டிருக்கேன்..."

அவன் சொல்லி முடித்த விநாடி - டெலிபோன் துடித்தது.

ரூபலா எழுந்து போய் ரிசீவரை எடுத்து பேச்சை செவிமடுக்க, விவேக் அவளையே பார்த்தான்.

ரூபலா கேட்டாள். "ஹூம் டு யூ வாண்ட் டு ஸ்பீக்?"

"..."

"ஸாரி. திஸ் இஸ் ஹோட்டல் மொகல் இண்டர்நேஷனல்..." ரூபலா ரிசீவரை வைத்துவிட்டு விவேக்கிடம் வந்து உட்கார்ந்தாள்.

"ராங் நம்பர்."

அபிலாஷ் எழுந்தான்.

"நான் வரட்டுமா சார்...? உங்களுக்கு வேண்டிய தகவல்களைக் கொடுத்துட்டேன். ஷர்மீயோட மரணத்துக்கு காரணமானவங்களை கண்டுபிடிக்க வேண்டியது உங்க பொறுப்பு. ஜங்கோலியா நாட்டு தூதரக ஆட்கள் சாமான்யப்பட்டவங்க இல்லை..."

"ஒரு நிமிசம் அபிலாஷ்! உன்கிட்டயிருந்து எனக்கு இன்னொரு தகவல் வேணும்."

"என்ன சார்?"

"உண்மையிலே நீ யாரு?"

"ஸ... சார்..." அவன் திகைக்க, விவேக் தன் மார்பு பகுதிக்குள் கையை நுழைத்து ரிவால்வரை எடுத்து நீட்டினான்.

"சொல்லு... நீ யாரு?"

"ஸ... சார்... நான் அபிலாஷ்... ஷர்மீயோட..."

"காதலன்!"

"ஆமா ஸ... சார்..."

"எனக்கு உதவி பண்றதுக்காக வந்திருக்கே?"

"ஆமா சார்..."

"உண்மையிலேயே எனக்கு நீ உதவி பண்ண வந்திருந்தா... இந்த தண்ணி ஜக்குக்குள்ளே... நான் பார்க்கலைன்னு நினைச்சுட்டு சின்னதா ஒரு மாத்திரையைப் போட்டியே அது எதுக்கு...?"

"மா... மாத்திரையா?"

"எஸ்... டெலிபோன் மணி அடிச்சதும் என்னோட ஒய்ஃப் போனை எடுக்க போனா. நானும் போன் யார்கிட்டயிருந்து வந்திருக்குன்னு தெரிஞ்சுக்கிற ஆர்வத்தில் என் ஒய்ஃப்பையே பார்த்துட்டிருந்தேன். அந்த சமயத்துலதான் கண்ணிமைக்கிற நேரத்துக்குள்ள - மாத்திரையை தண்ணி ஜக்குக்குள்ளே போட்..."

விவேக் பேச்சை முடிக்கவில்லை. அவன் சட்டென்று தன் கழுத்துப் பகுதியிலிருந்து எதையோ எடுத்துக் கடிக்க -



விவேக்கிற்கு உடனே புரிந்தது.

அது சயனைட் குப்பி.

'தற்கொலை செய்து கொள்ள பார்க்கிறான்!'

விவேக் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் - தன் வலது பூட்ஸ் காலை உயர்த்தி, அவனுடைய மணிக்கட்டை நொறுக்க, கையில் இருந்த குப்பி எகிறி விழுந்தது.

"ரூபலா அதை எடு..."

பாய்ந்து எடுத்துக் கொண்டாள்.

"நீ யாரு சொல்லு?"

விவேக் ரிவால்வரை உயர்த்த, அவன் எதிரே இருந்த டீபாயை எட்டி உதைத்துவிட்டு, கதவை நோக்கி ஓடினான்.

"ஏய்... நில்லு..."

அவன் வேகமாய் ஓடி - கதவு தாழ்ப்பாளை விலக்ினான்.

விவேக் சுட நினைத்து - நினைப்பை மாற்றிக் கொண்டான். 'இவன் உயிரோடு தேவை!'

விவேக் பாய்ந்தான்.

அதற்குள் அவன் கதவை திறந்துகொண்டு வராந்தாவில் ஓட ஆரம்பித்தான்.

"ரூபலா! அந்த தண்ணி ஜக்கை எடுத்து பத்திரமா வை..." விவேக் சொல்லிக்கொண்டே வராந்தாவில் பாய்ந்தான்.

'என்னமாய் ஓடுகிறான்? இவனைப் பிடிக்க முடியுமா?'

விவேக் யோசித்துக் கொண்டிருந்தபோதே, ஓடிக் கொண்டிருந்த - அவன் எதிரே வந்த ஒரு ஹோட்டல் பேரரை தள்ளிக்கொண்டு, வராந்தாவின் கோடியில் இருந்த கண்ணாடி தடுப்பை நோக்கி ஓடினான்.

விவேக்கிற்கு அந்த விபரீதம் புரிந்தது.

இது ஐந்தாவது மாடி. அவன் பூமியை முத்தமிடும்போது எதற்கும் தேறமாட்டான்.

"ஏய்ய்... நில்லு..."

விவேக் கத்திக் கொண்டிருக்கும்போதே -

'ச்ச்சலீர்ர்ர்ர்!'

கண்ணாடி தடுப்பில் தன் மண்டையை மோதிக்கொண்டு - வெளியே பாய்ந்தான்.

விவேக் ஓடிவந்து எட்டிப் பார்த்தான்.

கார் பார்க்கிங்கிற்கு சற்றுத் தள்ளியிருந்த காண்கிரீட் தரையில் ரத்தச் சேறாய் தெரிய - ஆட்கள் அந்த ஸ்பாட்டை நோக்கி பதட்டமாய் ஓடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

# 20

போலீஸ் வந்து - ரத்தச் சகதியாய் கிடந்த அவனை வழித்துக் கொண்டு போகிறவரைக்கும் ஸ்பாட்டில் இருந்த விவேக், பின் போலீஸ் அதிகாரியோடு அறைக்கு திரும்பினான். உடன் இரண்டு ஃபாரன்ஸி ஆட்கள்.

ரூபலா அறை வாசலிலேயே காத்திருந்தாள். கேட்டாள். "அவன் கிட்டயிருந்து தடயம் ஏதாவது



கிடைச்சுதா?"

"கிடைக்கல... ஆனா ஆள் ஒரு ஊனமான பேர்வழி. இடது கை முழங்கை வரை மட்டுமே. அதுக்கு கீழே சதை போலவே இருக்கிற ஜெல்லாலான கை. தலை வழுக்கை. விக் வைத்திருக்கிறான். அவனை தப்பிக்க விட்டிருந்தால் மறுபடியும் அடையாளம் கண்டுகொள்வது சிரமம்..."

உடன் வந்த போலீஸ் அதிகாரி கேட்டார். "வந்தவன் மாத்திரையை போட்ட வாட்டர் ஜக் எது?"

கட்டிலுக்கு கீழே பத்திரமாய் வைத்திருந்த வாட்டர் ஜக்கை எடுத்துக் காட்டினாள் ரூபலா.

போலீஸ் அதிகாரி பார்த்துவிட்டு ஆச்சர்யப்பட்டார்.

"தண்ணீர் ஸ்படிகம் மாதிரி அப்படியே இருக்கிறது. இதில் மாத்திரையைப் போட்டிருந்தால் - கலங்கலாக தெரியணுமே..."

"அவன் போட்ட மாத்திரையின் அளவு கடுகின் அளவுதான். அவன் என்னுடைய அறைக்குள் நுழைந்து பேச ஆரம்பித்த சில .விநாடிகளிலேயே வாட்டர் ஜக்கில் தண்ணீர் குடித்துவிட்டு, அதை பக்கத்திலேயே வைத்துக் கொண்டதை கவனித்தேன். அது கொஞ்சம் இடறியது. பேசிக் கொண்டிருக்கும்போது டெலிபோன் வந்தது. ரூபலா எழுந்து போனதும், அவன் நிமிர்ந்து உட்கார்வது தெரிந்தது. கண்ணிமைக்கிற நேரத்தில் வாட்டர் ஜக்கில் - வலது கையில் மறைத்து வைத்திருந்த அந்தச் சிறிய மாத்திரையை போட்டான். பிறகு

ஒன்றும் தெரியாதவன்போல் நகர்த்தி வைத்தான்."

"குட் அப்சர்வேஷன்..."

"அவனை தப்பிக்க விட்டது தப்பு. முழங்காலில் சுட்டு வீழ்த்தியிருக்க வேண்டும்."

"இந்த தண்ணீரை ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். எடுத்துக் கொள்ளலாமா?" ஃபாரன்ஸிக் அதிகாரி ஒருவர் கேட்க, விவேக் தலையசைத்தான்.

"கவனம்! நடந்து கொண்டிருக்கிற சம்பவங்களைப் பார்க்கும்போது இந்த மாத்திரை சாதாரண மாத்திரையாய் இருக்க முடியாது. சீல் செய்து எடுத்துப் போங்கள். அடுத்த ஒரு மணிநேரத்திற்குள் ரிப்போர்ட் வேண்டும்..."

"கிடைக்கும்..."

ஃபாரன்சிக் அதிகாரிகள் கிளம்ப, போலீஸ் அதிகாரியும் அடுத்த ஐந்து நிமிசங்களுக்குள் பேசிக் கொண்டிருந்துவிட்டு புறப்பட்டார்.

அவர் போனதும் ரூபலா விவேக்கைப் பார்த்து பெருமூச்சு விட்டாள். "அந்த ராஸ்கலை மடக்கிக் கட்டிப் போட்டிருந்தா... இந்நேரம் உண்மைகளை கறந்திருக்கலாம்..."

"உயிரோடு மாட்டியிருந்தாலும் அவன்கிட்டேயிருந்து உண்மைகளை கறக்க முடியாது..."

"எப்படி சொல்றீங்க?"

"வந்தவன் உயிரைப் பத்தி கவலைப்படாத



ஆசாமி! சயனைட் குப்பியை கடிக்கப் போனவன். லாக்கப்புக்கு கொண்ட போய் - என்ன சித்ரவதை பண்ணினாலும் சரி... ஒரு வார்த்தையைக் கூட கக்க மாட்டான்..."

"வாட்டர் ஜக்ல என்ன மாத்திரையைப் போட்டான்?"

"உனக்கும் எனக்கும் டெல்லியிலேயே சமாதி கட்டறதுக்கான மாத்திரையாத்தான் இருக்கும். பின்னே வைட்டமின் மாத்திரையா போட்டிருப்பான்...?"

"இந்த கேஸ் வேண்டாங்க... எனக்கு பயம்மா இருக்கு. அடுத்த ஃப்ளைட்லேயே சென்னைக்குப் போயிடலாம்...."

"மண்டு... அடுத்த சில மணிநேரங்களில் இந்தக் கேஸ் முடியப் போகுது..."

"கேஸ் முடியப் போகுதா? எப்படி?"

"வந்த அபிலாஷ் பொய். அவன் சொன்னது முழுவதும் பொய்யாய் ஏன் இருக்க கூடாது?"

"ஏதோ புரியுற மாதிரி இருக்கு..."

"அது போதும் எனக்கு..."

"அப்போ இங்க நடந்த சம்பவங்களுக்கெல்லாம் காரணம் ஜங்கோலிய நாட்டு தூதரக ஆட்கள் இல்லை..."

"ஆமா..."

"அப்படின்னா யாரு?"

"ஆள் யாருன்னு தெரியாது. ஆனா கைவசம்

போன் நம்பரும் அட்ரஸும் இருக்கு..." என்ற விவேக் தன் சர்ட் பாக்கெட்டில் இருந்த துண்டு காகிதத்தை எடுத்து நீட்ட அதை ரூபலா வாங்கிப் பார்த்தாள்.

ஜி.எச்.ராவ்

1022 சௌடி லேன்

மதன்புரி

டெல்லி - 6.

ரூபலா கேட்டாள். "யார் இந்த ஜி.எச். ராவ்?"

"போய் பார்த்தாதான் தெரியும்..."

"இந்த அட்ரஸ் உங்களுக்கு எப்படி கிடைச்சது?"

"நம்ம ஹோட்டலுக்கு வர்ற டெலிபோன் கால்களை மானிட்டர் பண்ணச் சொன்னேன். எனக்கு ஏதாவது வெளியேயிருந்து மிரட்டல் போன் வரக்கூடும்ங்கிற எண்ணத்தில்தான்...! எனக்கு ஏதாவது போன் வந்தா... வந்த நேரத்தை குறித்து வைக்கச் சொல்லி, ஹோட்டல் ரிசப்ஷன்ல சொல்லியிருந்தேன்..."

"சரி நமக்குத்தான் எந்த மிரட்டல் காலும் வரலையே...?"

"மிரட்டல் போன்கால் வரலை... ஆனா அந்த அபிலாஷ் நம்ம அறைக்குள்ள இருந்தப்ப ஒரு ராங் நம்பர் கால் வந்ததே?"

"அது ராங் நம்பர் ஆச்சே?"

"இல்லை சரியான நம்பர்தான். அபிலாஷ் மாத்திரையைப் போடணும்னா... நம்ம ரெண்டு பேரோட கவனம் சிதறணும். நம்ம கவனத்தை சிதற



வெக்கிறதுக்காகத்தான் அபிலாஷுக்கு வேண்டியவங்க யாரோ வெளியே இருந்து நம்ம அறைக்கு போன் பண்ணியிருக்காங்க..."

"இதை போலீசுக்கு இன்ஃபார்ம் பண்ண வேண்டியதுதானே?"

"நானும் டெல்லி போலீஸ் கமிஷனர் மட்டும் இன்னிக்கு ராத்திரி பதினோரு மணிக்கு மேல் அந்த ராவ் வீட்டுக்கு போகப் போறோம்..."

"நானும் வர்றேன்..." என்ற ரூபலா விவேக்கை கட்டிபிடித்து அவனுடைய இரண்டு கன்னங்களிலும் வெதுவெதுப்பாய் முத்தம் கொடுத்தாள்.

## 21

டெல்லி கமிஷனர் காத்திருந்தார். "கம்... மிஸ்டர் விவேக்..." கர்ரின் கதவு திறக்கப்பட உடனே ஏறிக் கொண்டார்கள்.

கார் உடனே புறப்பட்டது.

கமிஷர் கேட்டார். "மிஸ்டர் விவேக்! ரசாயன ரிப்போர்ட் கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் வந்தது. ரிப்போர்டில் இருந்த வாசகங்கள் பயங்கரமாக உள்ளன."

விவேக் ரிப்போர்ட்டை வாங்கிப் பார்த்தான்.

'தண்ணீரில் கரைத்திருக்கும் இந்த மாத்திரை ரசாயன ஆயுத வகையைச் சேர்ந்தது. இந்த மாத்திரையில் உள்ள கொடிய ரசாயனத்தின் பெயர் தியோ நைல் குளோரைடு. இந்த ரசாயனம்

பொதுவாய் வாயு ரூபத்தில்தான் இருக்கும். வாயுவை குளிர வைத்து, மாத்திரையாக தயாரித்திருக் கிறார்கள். தியோ நைல் குளோரைடின் பௌதீக குணங்கள்: மணமற்றது. ருசி அற்றது. தண்ணீரில் கரைத்தாலும் கரைந்து இருப்பதற்கான அறிகுறிகள் தெரியாது. தண்ணீரின் புறத்தோற்றத்தில் எந்த மாறுதலும் இருக்காது.

இந்த தியோ நைல் குளோரைடு கலந்த தண்ணீரை பருகினால் ஏற்படும் விளைவுகள்: ரசாயனம் உள்ளே சென்றதுமே ரத்தத்தில் கலக்கும். ரத்தம் உடனே கட்டி கட்டியாய் உறைந்து - அந்த ரத்தக் கட்டிகள் மூக்கு வழியாகவும் வாய் வழியாகவும் வெளியே தள்ளப்படும். ஐந்து நிமிசங்களுக்குள் மரணம் நிகழும். ரசாயனம் ரத்தத்தில் கரைந்ததும் அதனுடைய மூலப்பொருள்களின் அமைப்பு சிதறுண்டு போவதால் - ஒருவர் இறந்த பிறகு - அவர் இந்த தியோ நைல் குளோரைடு காரணமாகத்தான் இறந்தார் என்பதை போஸ்ட் மார்ட்டம் மூலம் கண்டுபிடிக்க முடியாது.'

ரிப்போர்ட் தன் வாசகங்களை முடித்துக் கொண்டது.

விவேக் கமிஷனரிடம் நிமிர்ந்தான். "ராகினி ஜெயகர் இறந்ததுகூட இது மாதிரியான ஒரு ரசாயன மாத்திரையால்தான் இருக்க வேண்டும் சார்..."

"ஷ்யூர்... இப்போதுதான் எல்லாம் தெரிகிறது... எதற்காக இதெல்லாம்...? நியூ டெல்லி எரிகிறது! அதென்ன வார்த்தை?"



"ராவ் சேதம் இல்லாமல் கிடைத்தால் உண்மைகளை வாங்கிவிடலாம்..."

பதினைந்து நிமிட பயணம். சௌடி லேனைக் கண்டுபிடித்தார்கள்.

1022 எண்ணில் அந்த பழைய கட்டடம் ஒரு போர்டோடு தெரிந்தது.

டெல்டா டேட்டா சிஸ்டம்ஸ்.

கதவு சாத்தியிருந்தது. சூர்க்கா உட்கார்ந்த நிலையில் தூங்கிக் கொண்டிருந்தான்.

கமிஷனர் குரல் கொடுத்தார்.

"கதவைத் திற..."

"ஸாப்...! மாலீக் கிட்ட கேட்டுட்டு..."

"எதையும் கேக்க வேண்டாம்... திற..."

கதவு தள்ளப்பட்டது.

வரவேற்பறை.

சுவரில் போட்டோவாய் மாறியிருந்தாள் ஒரு நடுத்தர வயதுப் பெண். கீழே பெயர்: கீதா அனுமந்தராவ்.

விவேக் திடுக்கிட்டான்.

கீதா அனுமந்தராவ்.

'இவள்தான் ஜி.எச்.ராவ்...'

"ஸார்... ஜி.எச்.ராவ் ஒரு பெண்... அதுவும் இறந்து விட்ட பெண். நாம இதை எதிர்பார்க்கலை..."

கமிஷனர் சூர்க்காவிடம் கேட்டார். "அனுமந்தராவ் உயிரோடு இருக்காரா?"

"இருக்கார்... ஸாப்..."

"அவருக்கு வீடு எங்கே?"

"இங்கிருந்து ரெண்டு கிலோ மீட்டர் தள்ளி உத்தம்புரியில். இப்போ அவர் டெல்லியில் இல்லை. வெளிநாடு போயிருக்கிறார்."

"எந்த நாட்டுக்கு?"

"தெரியாது..."

கமிஷனர் விவேக்கிடம் ஆங்கிலத்தில் "இவனை லாக்கப்புக்கு கூட்டிப் போய் சரியானபடி கவனித்தால் உண்மைகள் வெளியே வரலாம்..." என்று சொல்ல, கூர்க்கா அதை புரிந்துகொண்டு குபீரென்று வெளியே ஓடினான்.

விவேக் பின்தொடர்ந்து ஓட நினைப்பதற்குள், அவன் காம்பௌண்ட் கேட்டைத் தாண்டி வெளியே இருட்டில் கலந்து விட்டிருந்தான்.

கமிஷனர் சிரித்தார். "மிஸ்டர் விவேக்... இது தப்பான இடம்தான். சோதனை போட்டால் ஏதாவது கிடைக்கும்..."

போட்டார்கள்.

நான்கைந்து கம்ப்யூட்டர்கள். மானிடர்கள். சி.டிக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு சிடியாய் விவேக் பார்க்க – இடையில் ஒரு சிடியின்மீது பார்வை நிலைத்தது.

NDB Operation.

"சார்... இதைப் பாருங்கள்..."



"புரியவில்லை. கம்ப்யூட்டரில் போட்டுப் பார்த்தால்தான் தெரியும்."

"எனக்கு புரிந்த மாதிரி இருக்கிறது சார்..."

"என்ன.."

"NDBயின் விரிவாக்கம். New Delhi Burning என்று ஏன் இருக்கக்கூடாது.? ஷர்மீ இறக்கும்போது சொன்ன நியூடெல்லி எரிகிறது – வாக்கியத்தை நினைத்துப் பாருங்கள்..."

"எக்ஸலண்ட்" என்றார் கமிஷனர்.

## 22

நள்ளிரவு மணி 12.05.

டில்லியின் பிரதான கம்ப்யூட்டர் கேந்திரத்திற்கு சிடிக்களைக் கொண்டு வந்து கம்ப்யூட்டருக்கு கொடுத்து பார்த்தார்கள்.

அது புரியாத மொழிகளை – வார்த்தைகளைக் காட்டியது.

விவேக், ரூபலா, கமிஷனர் குழம்பினார்கள்.

"இது என்ன மொழி...?"

"அரபு மாதிரி தெரிகிறது. ஆனால் அரபு இல்லை..."

"கான்ஸலர் என்று அழைக்கப்படும் தூதரக தொடர்பாளர் ஒருவரைக் கூப்பிட்டால் இது என்ன மொழி என்று தெரிந்துவிடும்" விவேக் சொல்ல –

"நான் ஏற்பாடு செய்கிறேன்..." கமிஷனர்

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் போனில் பேசிவிட்டு வந்தார். அடுத்த அரைமணி நேரத்தில் தூதரக தொடர்பு அதிகாரி ஒருவர் மிச்ச தூக்கத்தை கண்களில் வைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்.

கம்ப்யூட்டரில் சிடிக்களைப் போட்டு பார்த்துவிட்டு முன் நெற்றியைக் கீறினார். பின் சொன்னார். "இது செபஸ்தியா நாட்டு மொழி. எழுத்துக்களின் வடிவம் எனக்கு பிடிபடுகிறது. ஆனால் மொழியை என்னால் புரிந்து கொள்ள முடியாது. இந்த மொழி தெரிந்த ஒரே ஒரு கான்ஸலர் ஜோஷி பாட்டீல் ஒருவர்தான். அவரை வரவழையுங்கள். இந்த சிடிக்களின் ஜாதகம் தெரிந்துவிடும்..."

கமிஷனர் மறுபடியும் டெலிபோனுக்கு ஓடினார். கான்ஸலர் ஜோஷி பாட்டீலுக்கு போன் செய்ய - அவருடைய மனைவி பேசினாள். விவரத்தைக் கேட்டுவிட்டு சொன்னாள்.

"அவர் ஆக்ரா போயிருக்கிறாரே...?"

"எதற்கு?"

"நண்பர் வீட்டு கல்யாணம்... நேற்று மாலைதான் போனார்."

"அட்ரஸ் கிடைக்குமா?"

"தேடிப் பார்க்க வேண்டும்... உங்கள் டெலிபோன் நம்பரைக் கொடுங்கள். அட்ரஸ் கிடைத்ததும் உங்களுக்குப் போன் செய்கிறேன்..."

"இது அவசரம்... உடனே ஜோஷி பாட்டீல் டெல்லி வரவேண்டும்..."



# 23

ஆக்ராவில் - கல்யாண வீட்டில் இருந்த ஜோஷி
ாட்டீலுக்கு தகவல் போய் - அவர் விமானம் பிடித்து
டல்லி வந்து சேரும்போது - மறுநாள் காலை
த்தேகால் மணி.

விவேக் - கமிஷனர் முன்னிலையில்
டிக்களைப் போட்டு பார்த்தார் ஜோஷி பாட்டீல்.

"இது செபஸ்தியா நாட்டு மொழி..."

"இந்த NDB சிடியை போட்டுப் பாருங்கள்..."

NDB சிடியை கம்ப்யூட்டர் சாப்பிட்டது. மானிட்டர்
ரையில் செபஸ்தியா நாட்டு மொழி வார்த்தைகளாய்
- ஜோஷி பாட்டீல் அதை ஆங்கிலத்தில்
ாழிபெயர்த்தார்.

"நியூடெல்லி பர்னிங் ஆபரேஷன் பத்தாம் தேதி
லை பத்தே முக்கால் மணிக்கு தொடங்குகிறது.
ல்லி பாராளுமன்றம் அன்று காலை கூடுகிறது.
50 உறுப்பினர்களாவது இருப்பார்கள். இதில்
தம மந்திரியும் மற்ற மந்திரிகளும் அடக்கம். பத்து
ணியிலிருந்தே - பாராளுமன்ற கட்டிடத்தின் மத்திய
கண்டிஷனர்கள் வழியாக - தியோ டை
ளைகோல் ரசாயன மாத்திரைகள் வாயு ரூபமாய்
றி - உள்ளே நுழைய ஆரம்பித்துவிடும்.
னைவரும் உள்ளே வந்து அமர்வதற்குள் தியோ
கிளைகோல் வாயு நூறு சதவீதம் நிரம்பிவிடும்.
யாய் பத்தே முக்கால் மணிக்கு எலக்ட்ரோ
ன்ஜீனியர் ஜெயகர் ஏர்கண்டிஷனர் வேலை
ய்வதை நிறுத்தி விடுவார். ஏர்கண்டிஷனர் வேலை

செய்யாததால் கட்டிடத்துக்குள் மனிதர்கள் வெளியிடும் கார்பன் டை ஆக்ஸைடு அதிகமாகும் வெப்பநிலை உயரும். இரண்டே நிமிசங்கள்தான் கட்டிடத்தின் உள்ளே பரவியிருக்கும் தியோ கை கிளைகோல் குபீரென்று தீப்பற்றிக் கொள்ளும் இரும்பை உருக வைக்கக்கூடிய வெப்பத்தோடு எரிய ஆரம்பிக்கும். பாராளுமன்ற கட்டிடம் – இந்தி நாட்டின் அனைத்து எம்.பி.க்களும் மந்திரிகளு பிரதம மந்திரியும் பதினைந்தே நிமிஷத்தில் சாம்பல்

விவேக் பரபரத்து யோசித்தான்.

"இன்றைக்கு தேதி என்ன...?"

"பத்து."

"நேரம்...?"

"பத்து இருபது."

விவேக் கத்தினான்.

"சார்... நாம் உடனே பாராளுமன்றத்துக்கு போகணும். பத்தே முக்கால் மணிக்குள்ளே போயாகணும். தாமதிக்கிற ஒவ்வொரு நிமிசமு ஆபத்து..."

"டெலிபோனில் சொல்லி விடலாமா...?"

"டெலிபோன் வழியாக செய்தி போனால் காரிய கெட்டுவிடும். திட்டப்படி இப்போது – தியோ கிளைகோல் வாயு பாராளுமன்ற கட்டிடத்திற்கு நுழைந்து கொண்டிருக்கும்... நாம் டெலிபோ செய்து விபரத்தைச் சொன்னால் விசயம் பர ஜெயகரின் காதுக்குப் போய்விடும். அவன் உடனே ஏர்கண்டிஷனரை நிறுத்தினால்கூட உள்ளே இருக்கிற சொற்ப எம்.பி.க்களும் கட்டிடத்தோ



ரிந்து போய்விடுவார்கள். நாம் நேரில் ாய்த்தான்... அந்த ஜெயகரை மடக்க வேண்டும்..."

"வாங்க... சீக்கிரம்..."

## 24

ஜீப் அலறி பாய்ந்தது.

விவேக் வியர்வை முகமாய் தன் மணிக்கட்டில் ருந்த வாட்ச்சைப் பார்த்தான்.

நேரம் 10.25.

"இருபது நிமிசத்திற்குள் போய்விடலாமா?"

"போய்விடலாம்..."

"வழியில் டிராபிக் ஜாம் ஏற்பட்டால் போயிற்று..."

"டிரைவர்... சீக்கிரம்... எந்த சிக்னலையும் ர்க்காதே... போய்கிட்டே இரு..."

10.30க்கெல்லாம் பாராளுமன்ற கட்டிடம் ர்வைக்குத் தெரிந்தது.

"வந்துவிட்டோம்..."

"இன்னும் சரியாய் பதினைஞ்சு நிமிசம்... ருக்கிறது. அந்த ஜெயகரை மடக்க வேண்டும்..."

"ஆரம்பத்திலேயே அந்த ஜெயகரை உரசி ணர்த்திருக்க வேண்டும். அழுகையைப் பார்த்து ாந்துவிட்டோம்."

10.35.

ஜீப் பாராளுமன்ற கட்டிடத்தின் மெயின் நுழைவு ாயிலுக்குள் நுழைந்தது. எம்.பிக்கள் படிகளில் றி உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள்.

பத்திரிகையாளர்கள், போட்டோகிராபர்கள் நிரம்ப வழிந்தார்கள். வரப்போகும் மந்திரிகளை வரவேற் செயலாளர்கள் காத்திருந்தார்கள்.

விவேக் ஜீப்பிலிருந்து குதித்து உள்ளே ஓடினான்

வழியில் நின்றவர்களைத் தள்ளிக்கொண்டு மூச்சிரைத்தபடி பாராளுமன்ற கட்டிடத்துக் பின்பக்கம் இருந்த எலெக்ட்ரிக் கேபினை நோக் ஓடினான்.

'ஜெயகர் அங்கே இருப்பானா?'

ஏர்கண்டிஷனர் காபின் வழியில் வந்தது.

'ஒருவேளை இங்கே இருப்பானோ...?'

விவேக் எட்டிப்பார்த்தான்.

உள்ளே -

ஜெயகர்.

யாரோ ஒருவனோடு சிரித்துப் பேசிக்கொண்டு

சத்தம் கேட்டு அவன் நிமிர்வதற்குள் - விவே பாய்ந்தான். வயிற்றிலும் மார்பிலும் ஒரு டஜ உதை.

ஜெயகர் சரிந்தான்.

## 25

டில்லி போலீஸ் ஹெட் குவார்ட்டர்ஸ்.

ஸ்டூலில் உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்த ஜெய போலீஸ் அடிக்கு கீழ்ப்படிந்து உண்மைகள சொல்லிக் கொண்டிருந்தான்.

"அனுமந்தராவ் ஒரு வல்லரசு நாட்டின் கைக்கூ



இந்தியாவில் பிரச்னைகளை உருவாக்க வேண்டும் என்பது அவருக்கு இடப்பட்ட கட்டளை. அவர் ஒரு கம்ப்யூட்டர் சென்டரை நடத்தி வருவதால் - அதன் காரணமாய் எனக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட்டது. சில ரசாயன ஆயுதங்களை மாத்திரை வடிவில் செய்து அவைகளை இந்தியாவில் சோதனை செய்து பார்க்க வேண்டும் என்று இந்த வல்லரசு நாடு விரும்பியதால், அனுமந்தராவ் என் உதவியோடு அதை செயல்படுத்த விரும்பினார். அதற்காக எனக்கு ஐம்பதாயிரம் டாலர் பணமும் கொடுக்கப்பட்டது. வல்லரசு நாடு திட்டம் தீட்டி கம்ப்யூட்டர் ஃப்ளாப்பி மூலமாய் செப்ஸ்தியா நாட்டு மொழியில் அனுப்பி வைத்தது. யே என்ற எழுத்துக்களோடு கெமிக்கல் வெப்பன்ஸ் சம்பந்தப்பட்ட சி.டிக்களையும் அனுப்பி வைத்தது. செபஸ்தியா நாட்டு மொழியை உலகில் 1% சதவீதத்தினர் மட்டும் பேசுவதால் - யாருக்கும் தெரியாத அந்த மொழியில் சிடிக்கள் தயாரிக்கப்பட்டன. அனுமந்தராவுக்கு செபஸ்தியா மொழி தெரியும்..."

விவேக் கேட்டான். "டெல்லி பாராளுமன்றத்தை அதன் உறுப்பினர்களோடு சேர்த்து ரசாயன மாத்திரைகள் மூலம் எரிக்க வேண்டும் என்பது வல்லரசு நாட்டின் கட்டளை இல்லையா?"

"ஆமாம்..."

"சரி... ஷர்மீ இதில் சம்பந்தப்பட்டது எப்படி?"

"சிபிஐ ஆபீசரான ஷர்மீக்கு பாராளுமன்ற கூட்டக் காலங்களில் அங்கே ட்யூட்டி உண்டு. எப்படியோ அவளுக்கு என் நடவடிக்கைகளில்

சந்தேகம் ஏற்பட்டது. என்னைக் கண்காணிக்க
ஆரம்பித்தாள். இரண்டு நாட்களுக்கு முன்பு ராத்திரி
வேளையில் என் வீட்டுக்குள் புகுந்து, எதையோ
தேடியிருக்கிறாள். எப்போதோ எனக்கு வழியில்
கிடைத்த ஒரு ஜங்கோலியா நாட்டு டயரியை என் டயரி
என்று நினைத்து எடுத்துக்கொண்டு ஓடினாள். நான்
துரத்த ஆரம்பித்தேன். அவள் அந்த டயரியை ஒரு
மோட்டார் பைக் இளைஞனிடம் கொடுத்து அனுப்பி
விட்டாள். நான் அவளை விடாமல் துரத்திக் கொண்டு
போய் - அமர்நாத் காலனி டெலிபோன் பூத்தில்
வைத்து தீர்த்துக் கட்டினேன்."

"நியூ டெல்லி எரிகிறது என்கிற வாக்கியப்
ஷர்மீக்கு எப்படி தெரிந்தது?"

"பாராளுமன்ற கட்டிட டெலிபோன் பூத்திலிருந்து
மூன்று நாட்களுக்கு முன்பு அனுமந்தராவோ
நான் டெலிபோனில் பேசினேன். அப்போது ஒட்
கேட்டிருக்கலாம். அப்படி ஒட்டுக் கேட்டதால்தான்
மேற்கொண்டு விவரங்கள் தெரிந்து கொண்டு என்
வீட்டை சோதனை போட திருட்டுத்தனமாய் வந்தாள்

"உன்னோட மனைவி ராகினி மரணம் எப்படி...
அதுக்கும் நீதான் காரணமா?"

"நான் அவளை வேண்டுமென்று
கொல்லவில்லை. கல்லூரியிலிருந்து தலைவ
என்று வந்தவள் - தவறுதலாய் டோலா
மாத்திரைக்குப் பதிலாக என் மறதியின் காரணமா
வைத்திருந்த - ரசாயன மாத்திரையை எடுத்
விழுங்கிவிட்டாள். அப்போது எனக்கும் தெரி
வில்லை. ஹாஸ்பிடலுக்கு கொண்டு போய் - அட்மி
செய்த பின்தான் தெரிந்தது. திருடனுக்கு தே



கொட்டியதுபோல் மௌனமாய் இருந்துவிட்டேன். என் மனைவியை நான் உண்மையாக நேசித்தவன். அவளுடைய மரணத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..."

"அபிலாஷ் என்பவன் யார்...?"

"அவனும் எங்கள் கூட்டத்தில் ஒருவன்... அவனுடைய உண்மையான பெயர் சாத்தே. ஒரு கை ஊனமானவன். ஷர்மீ இறந்ததும் சந்தேகத்தை ஜங்கோலியா நாட்டு தூதரக ஆட்களின் மேல் ஊர்ஜிதப்படுத்துவதற்காக அபிலாஷ் என்கிற பெயரில் அனுப்பி வைத்தோம். நீங்கள் போலீஸ் டிபார்ட்மெண்டிற்கு அபிலாஷ் சொன்ன ஸ்டேட்மெண்ட்டை அனுப்பி வைப்பீர்கள் என்று நம்பினோம். அதே சமயத்தில் உங்கள் மரணத்திற்கும் அஸ்திவாரம் போட, குடிக்கும் தண்ணீரில் ரசாயன மாத்திரையை அபிலாஷ் கலந்தான். நீங்கள் கண்டுபிடித்து விட்டீர்கள்..."

"அனுமந்தராவ் இப்போது எங்கே?"

"வெளிநாட்டில்..."

"எந்த நாடு...?"

"தெரியாது..."

"உங்கள் கும்பலில் மொத்தம் எத்தனை பேர்?"

"ஏழு பேர்... அதில் இரண்டு பெண்கள்."

"எல்லோரும் டெல்லியில்தானே இருக்கிறார்கள்?"

"ஆமாம்..."

உண்மைகள் மளமளவென்று கொட்ட - பக்கத்தில் இருந்த டேப் ரிக்கார்டர் ஜெயகர் சொன்ன

வாக்கியங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

விசாரணையை முடித்துக் கொண்டு வெளியே வந்தான் விவேக். பின்னால் ரூபலா.

தொலைவில் -

பாராளுமன்றக் கட்டிடம் உயிரோடு தெரிந்தது. விவேக்கிற்கு நன்றி சொல்வதுபோல் - அதன் உச்சியில் பறந்து கொண்டிருந்த தேசியக் கொடி அசைந்தது.

(முற்றும்)


## திரில் டைம்

மலர்: 2 இதழ்: 6

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.முருகன்**

**அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்**

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர்,

நந்தனம், சென்னை - 600 035.

போன். 044 - 2436 1734



கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.



'Thrill Time' Novel Monthly

Owner, Publisher & Editor **M.S. Murugan**,

Published at:

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,

Nandanam, Chennai - 600 035. Phone : 98405 14529